பல்கலைக்கழக விவகாரம்

# விசாரணைக்கமிஷன், உயர்கல்விச்சபை ரத்தாகும்!

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★★

கேட்டு வாங்குங்கள்
சங்கு மார்க்
பித்தளைப் பிணைச்சல்கள்
இரண்டு பக்கமும் தறையப்பட்டது
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130

ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர் 12
இதழ் 114
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் வைகாசி 22 ரபி. அவ் 29 வெள்ளிக்கிழமை [5-6-70]



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

## மாணவர் ஊர்வலத்தில் கல்வி அமைச்சர் தகவல்

கண்டி, வியாழன்

"பல்கலைக்கழக விசாரணைக் கமிஷன் கலைக்கப்படும், தேசிய உயர் கல்விச்சபை ரத்துச் செய்யப்படும். இதற்கான சட்டமும் ரத்தாகும்" என கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்முத் தெரிவித்துள்ளார்.

இன்று காலை பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நடாத்திய ஊர்வலத்தில் கலந்து கொண்டு கல்வி அமைச்சர் பேசினார்.

கூட்டாட்சிக் கட்சிகளின் வெற்றியைக் கொண்டாடும் பொருட்டு கண்டியில் இன்று மாலை பிரமாண்டமான ஊர்வலம் நடந்தது இந்த ஊர்வலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டார்கள்.

மாணவர்களில் பலர் சிகப்பு, நீலநிறச் சட்டைகள் அணிந்திருந்தனர். இந்த ஊர்வலத்தை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர் கவுன்சிலும் ஆசிரியர்களும் சிறு ஊழியர் சங்கமும் ஒழுங்கு செய்திருந்தது.

மாணவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து போகம்பரை மைதானத்திற்கு ஊர்வலமாகச் சென்றார்கள். ஊர்வலத்தில் மாணவர்கள் கோஷங்களை எழுப்பிச்சென்றார்கள்.

போகம்பரை மைதானத்தில் ஊர்வலத்தை தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேராசிரியர்களும் மாணவர்சங்க தலைவர்களும் உரையாற்றினார்கள்.



### தமிழில் பேசினார்

ஊர்வலத்துக்கு பலத்த பொலிஸ் பந்தோபஸ்து அளிக்கப்பட்டிருந்தது. கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த டாக்டர் இந்திரபாலா மாணவர்கள் முன்னிலையில் தமிழில் பேசினார். ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்த வெற்றி மக்கள் வெற்றியெனக் குறிப்பிட்டார்.

# திறைசேரி காலி; வங்குரோத்து நிலையில் நாடு இருக்கிறது

## சிக்கனம் தேவை; நிலைமையை சமாளிக்க இடைக்காலவரிவிதிப்பு

### நிதி அமைச்சர் டாக்டர் பெரேரா விளக்கம்

கோட்டை, வியாழன்

முன்னைய அரசாங்கம் நாட்டை வங்குரோத்தான நிலையில் வைத்துவிட்டுச் சென்றிருக்கிறது. திறைசேரி காலியாகக்கிடக்கிறது. இந்த நிலையை சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதற்கு ஆலோசனை செய்துவருகிறேன்.

இவ்வாறு நிதிஅமைச்சர் டாக்டர் என்.எம் பெரேரா இன்றுகாலை தமது இல்லத்தில் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

'எல்லாம் நன்றாக இருக்கிறது என்று கூறிப் பொது மக்களை ஏமாற்ற முடியாது. மக்களுக்கு நாட்டின் பொருளாதார நிலை பற்றிய உண்மையைச் சொல்லித்தானாக வேண்டும்' என்று கூறிய டாக்டர் என். எம். பெரேரா திறைசேரி காலி



கொள்ளவிருப்பதாகத் தெரிவித்த நிதி அமைச்சர் இதனால் அன்றாட வங்கி நடவடிக்கைகள் பாதிக்கப்படமாட்டாதென்றும் கூறினார் ... நலனை உத்தேசித்துப் பொதுமக்கள் சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்

40,000 மக்கள் பலி

## பெரு நாட்டில் ஒரு வாரம் தேசிய துக்கம்

லிமா, ஜூன் 4

இந்த யுகத்திலேயே உலகில் எந்த ஓர் இடத்திலும் நடந்திராதவகையில் தென் அமெரிக்க பெருநாட்டில் பூகம்பத்தினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் மாண்டதையொட்டி அந்த நாட்டில் ஒரு வாரம் தேசிய துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

பூகம்பத்தினால் மாண்டவர்களின் எண்ணிக்கை முப்பத்தையாயிரத்துக்குமதிகமாக இருக்கலாம் என இப்போது மதிப்பிடப்பட்டிருக்கிறது. லிங்காய் என்ற நகரில் மட்டும் இருபத்தையாயிரத்துக்குமேற்பட்ட மக்கள் பூகம்பத்தினால் மாண்டனர்.

மீட்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும் சிறுசிறு நடுக்கம் ஏற்பட்டு அந்த வேலைகளைப் பாதிக்கச் செய்கின்றது. அணைக்கட்டுக்கள் உடைந்து வெள்ளப் பெருக்கினாலும் மீட்பு வேலைகள் பாதிக்கப்படுகின்றன. பெருவின் தலைநகரான லிமாவில் இன்று மீண்டும் பூமியதிர்ச்சி ஏற்பட்டதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

## இருவாரம் விண்வெளி சஞ்சாரம்

மாஸ்கோ, ஜூன் 4

விண்வெளியில் பூவலம் வரும் சோயுஸ் - 9 என்ற சோவியத் விண்வெளிக் கப்பலில் பயணம்செய்துவரும் இரு விண்வெளி வீரர்களும் குறைந்தது இருவாரகாலத்துக்காவது விண்வெளியில் தங்கியிருப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட நாட்கள் விண்வெளியில் மனிதன் சஞ்சரிக்க முடியுமாவென்பது பற்றி வைத்தியப் பரிசோதனை செய்வதுதான் சோயுஸ் - 9இன் முக்கிய நோக்கமாம்.

1965ம் ஆண்டு அமெரிக்க விண்வெளி வீரர்கள் இருவர் 14 நாள் 8 மணி நேரம் விண்வெளியில் சஞ்சரித்துப் பெரும் சாதனை ஒன்றை நிலைநாட்டியிருந்தனர். அமெரிக்காவின் இந்தச் சாதனையை முறியடித்து நீண்ட நாட்கள் வானவெளியில் சஞ்சரிப்பது பற்றி தற்போது சோவியத் யூனியன் பரீட்சித்து வருகிறது கடந்த 3 நாட்களாக சோயுஸ்-9 கலம் பூமியைச் சுற்றிய பாதையில் வலம்வந்து கொண்டிருக்கிறது.

## கவியரங்கு, கருத்தரங்குடன்

பிரிட்டிஷ்

## தேர்தல் கூட்டங்களில் இனப்பாகுபாடு

லண்டன், ஜூன் 4

பிரிட்டிஷ் தேர்தல் பிரசாரத்தில் நேற்றுத் திடீரென இனப் பாகுபாடு இடம்பெற்றது. கன்சர்வேட்டிவ்கட்சியைச் சேர்ந்த

இருப்பதாகத் தொழிற்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

நிறத்தவர்களின் குடியேற்றம் நிறுத்தப்படவேண்டும் என்றும், புதிய பிரஜாவுரிமைச் சட்டம் இயற்றப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...டிருக்கிறது. ... செய்திகள் கிடைத்துள்ளன.

# கவியரங்கு, கருத்தரங்குடன் கருணாநிதியின் பிறந்தநாள்

சென்னை, ஜூன் 4

தமிழ் நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதியின் 47-வது பிறந்தநாளை திராவிடமுன்னேற்றக் கழகத்தினர் நேற்று சென்னையில் சிறப்பாகக் கொண்டாடினர்.

கவியரங்கு, கருத்தரங்கு ஆகியனவும் நடைபெற்றன. தமிழ்மொழிவளர்ச்சிக்கும் தமிழ்ப்பண்பாட்டுக்கும் திரு. கருணாநிதி ஆற்றியுள்ள பணியைப் பலரும் பாராட்டிப்பேசினர்.

கல்கத்தாவிலுள்ள அண்ணா தமிழ்ச்சங்கம் நேற்றுகருணாநிதியின்பிறந்த நாளைக் கொண்டாடியது. அந்தச்சங்கம் நேற்று தனது புதிய கட்டிடத்தில் தனது அலுவல்களை ஆரம்பித்தது. இச்சங்கத்தின் இலவசப் பள்ளிக்கூடமொன்றை இவ்வருட முடிவுக்குள் திரு. கருணாநிதி தொடக்கி வைப்பார்.

உயர் கல்விச்சபைக்குப்பதில்

# விரைவில் பல்கலைக்கழக மான்ய குழு நியமிக்கப்படும்

கொழும்பு, வியாழன்

தேசிய உயர்கல்விச்சபைக்கு பதிலாகப் பல்கலைக்கழகங்களின் மான்ய குழுஒன்று நிறுவப்படலாம் எனஎதிர் பார்க்கப்படுகிறது

வேண்டிய திருத்தங்கள் செய்யும்வரை தேசிய உயர் கல்விச்சபை தனது வழமையான முறையில் செயல்பட்டு வரலாம் என தேசிய உயர்கல்விச்சபைத் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகராவிடம் கல்வி அமைச்சர்திரு. ப. தியுதீன்முகமத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களின் மானியக்குழு அமைப்பது பற்றி தான் ஆலோசனை நடாத்திவருவதாகவும் அமைச்சர் உயர்கல்விச் சபை அதிபரிடம் தெரிவித்தார்

உயர்கல்வி அமைப்பை மாற்றி அமைப்பதற்குரிய விரிவானதிட்டங்களை உருவாக்குவதற்குமுன் பல்கலைக் கழகவிசாரணைக் குழுவின் அறிக்கையை கல்விஅமைச்சு எதிர்பார்க்கிறது.

மான்னிய குழுவொன்றை உயர்கல்விச்சபையின் இடத்தில் நிறுவுவதும் உயர் கல்விச்சட்டத்தை நீக்குதலும் ஐக்கியமுன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவையாகும்.

# ‘ஐக்கியத்தை உருவாக்கி பொருளாதாரத்தை வளப்படுத்துக’

## காங்கேசன்துறை ப. ச. தலைவர் பிரதமருக்குச் செய்தி

காங்கேசன்துறை, வியாழன்

“இலங்கையில் வாழும் சகல இன, ஜாதி, சமயத்தவர்களுக்குமிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தி அவ் ஏற்றுமையின் மூலம் ஒரு ஸ்திரமான பொருளாதார அபிவிருத்தியை நிலைநாட்டுக.”

இலங்கையின் புதிய பிரதமராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து காங்கேசன் துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. க ஜெயபாலசிங்கம் பிரதமருக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

பட்டினசபைத் தலைவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

“இலங்கையின் பொருளாதார சுபீட்சத்திற்குக் காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தி ஓர் அத்தியாவசியமான அம்சமாகும். ஆகையால் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் துறைமுக விஸ்தரிப்பு வேலைகளை துரிதப்படுத்தும்படி கேட்டுக் கொள்வதுடன், இலங்கையின் இறந்த மீன்பிடித் துறைகளில் ஒன்றான மயிலிட்டிக்கரையோரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மீன்பிடித் துறைமுக வேலைகளைக் கூடிய சீக்கிரத்தில் நிறைவேற்றி மீன்பிடித் தொழிலை விருத்தி செய்யவும்.”

...மக்களுக்கு நாட்டின் பொருளாதார நிலை பற்றிய உண்மையைச் சொல்லித்தானாக வேண்டும்’ என்று கூறிய டாக்டர் என். எம். பெரேரா திறைசேரி காலியாகக் கிடக்கிறதென்றும் உள்நாட்டு, வெளிநாட்டு இருப்பு எதுவுமில்லையென்பதையும் விளக்கிக் கூறினார்.

நிதிநிலைமையைச் சமாளிப்பதற்கு, வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு முன்னரே சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறதென்றும் தாம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கக்கூடியதாக இருக்கமாட்டாதென்



றும் சொன்னார். வரவு—செலவுத்திட்டத்தைச்சமர்ப்பிப்பதற்கு முன்னரே ஓர் இடைக்கால நடவடிக்கையாக சில வரிவிதிப்பு முறைகளைக் கொண்டுவரவேண்டியுள்ளதென்றும் டாக்டர் பெரேரா கூறினார்.

மக்கள் வங்கிமூலம் சில நடவடிக்கைகளை மேற்...ஜல் அன்றாட வங்கி... வடிக்கைகள் பாதிக்கப்படமாட்டாதென்றும் கூறினார்.

நாட்டின் நலனை உத்தேசித்துப் பொதுமக்கள் சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்றும் சிறிது தியாகம் செய்ய முன்வரவேண்டுமென்றும் அவர் சொன்னார். அரசாங்க இலாகாக்களின் செலவினங்களும் வெகுவாகக் குறைக்கப்படுமென்றும் நிதி அமைச்சர் கூறினார்.

வங்கிகள் அரசுடமையாக்கும் திட்டம் அரசாங்கத்துக்கு இருக்கிறது. ஆனால் நாளடைவில் தான் இத்திட்டம் செயல்படுத்தப்படும். அந்நிய வங்கிகள் தேசிய உடமையாக்கும் திட்டம் இல்லை என்றும் அவர் சொன்னார்.

# 1857ம் ஆண்டு சுதந்திர வீரர் குடும்பங்களுக்கு சன்மானம்

புதுடில்லி, ஜூன் 4

1857ம் ஆண்டு பாரதத்தில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, கொடுமைக்குள்ளாகியவர்களின் தலைமுறையினருக்குச் சன்மானம் வழங்க ஹரியானா அரசு முடிவுசெய்துள்ளது

இந்த முடிவின்படி 25 குடும்பங்கள் சன்மானம் பெறவிருக்கின்றனர். தலா 5,000 ரூபா வீதம் இவர்களுக்கு வழங்கப்படும்.

# பத்திரிகைச் சபை

பத்திரிகைகளை அரசாங்கம் எடுக்கமாட்டாதென்றும் பத்திரிகைச்சபையொன்று விரைவில் நிறுவப்படும் என்றும் டாக்டர் பெரேரா தெரிவித்தார்.

நியாயமான முறையில் சுதந்திரமாக குறைகளை எடுத்துக்கூற பத்திரிகைகளுக்கு அனுமதியளிக்கப்படும் சுயேட்சையாக இயங்கும் பத்திரிகைகள் ஊக்குவிக்கப்படும் என்றும் திரு. என். எம். பெரேரா கூறினார்.

# ‘உப - உற்பத்திக்கு வசதி செய்து தருக’

யாழ்ப்பாணம், வெள்ளி

பரந்தன் இரசாயன தொழிலாளர்சங்கம் கூட்டு முன்னணிப் பிரதமரையும் அவரது அமைச்சர்களையும் வாழ்த்தி கடிதம் எழுதியுள்ளது.

அவ்வாழ்த்துச் செய்தியில மேற்படி தொழிற்சாலைக்கு மேலும் வேண்டிய உப உற்பத்திக்கு வசதிசெய்து தரும்படியும் கூறப்பட்டுள்ளது.

நல்லமுறையில் இயங்கி வரும் இரசாயன தொழிற்சாலைக்கு ஆக்கமும் ஊக்கமும் புதிய அரசாங்கம் செய்யுமெனத் தாம் நம்புவதாக அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

[கு. வி. ம]

# விவசாயப்படை ஆணையாளர் ராஜினாமா

கோட்டை, வியாழன்

விவசாயப்படையின் ஆணையாளர் கப்டன் எச். ஆர் செனிவரத்ன செவ்வாய்க்கிழமையன்று தனது ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

விவசாயப்படை தொடர்ந்து இயங்க வேண்டுமா என்பது குறித்துப் புதிய அரசாங்கம் இதுவரை ஒரு தீர்மானத்துக்கும் வரவில்லை.

# வியாபாரத்தில் மந்தநிலை

கோட்டை, வியாழன்

கடந்த சில தினங்களாகச் சந்தை நிலைமை பீக்ஸ்விற்பனை தற்காலிமாக நிறுத்திவைக்கப்பட்டதையொட்டி மந்த நிலையயடைந்துள்ளது, பகிரங்க பொது லைசென்சின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் பலவற்றின் விற்பனை அரிதாகக்காணப்பட்டிருக்கிறது.

# பஸ் சாரதி கொலை வழக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

கொடிகாமம் பஸ் சாரதி கொலை வழக்கு இன்று காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்படவிருக்கிறது.

# வீடமைப்பு நிர்மாண அமைசசின் கீழ்இயங்கும்

கோட்டை, வியாழன்

இதுவரை உள்ளூராட்சி அமைச்சின் கீழ்இருந்துவந்த மாளிகாவத்தை வீடமைப்புத்திட்டம் எதிர்காலத்தில் வீடமைப்பு நிர்மாண அமைச்சின்கீழ் இயங்கும்.

நாட்களாக சோயுஸ்-9 கலம் பூமியைச் சுற்றிய பாதையில் வலம்வந்து கொண்டிருக்கிறது.

உலக உதைபந்தாட்டம்

# பிரேஸில் வெற்றி

மெக்ஸிக்கோ, யூன். 4

மெக்ஸிக்கோவில் நடைபெறும் உலக உதைபந்தாட்டப் போட்டியில், பிரேஸிலுக்கும் - செக்கோஸ்லோவாக்கியாவுக்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான போட்டியில் பிரேஸில் 4—1 கோல்களால் வெற்றி பெற்றது. இதுவரை மெக்ஸிக்கோவில் நடைபெற்ற ஆட்டங்களில், பிரேஸில் முதல் போட்டியிலே, கூடுதலான கோல்களைப் போட்டு முன்னணி வகிக்கின்றது.

பெல்ஜியத்துக்கும் - இஸ்செல்விடர்ருக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பெல்ஜியம் 3-0 கோல்களால் வெற்றிபெற்றது.

இத்தாலிக்கும்- சுவீடனுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், இத்தாலி 1-0 கோலால் வெற்றி பெற்றது.

கிழக்கு ஜேர்மனிக்கும்- மொரொக்கோவுக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில், கிழக்கு ஜேர்மனி ஈற்றில் 2-1 கோல்களால் வெற்றி பெற்றது.

லண்டன், ஜூன் 4

பிரிட்டிஷ் தேர்தல் பிரசாரத்தில் நேற்றுத் திடீரென இனப் பாகுபாடு இடம்பெற்றது. கன்சர்வேட்டிவ்கட்சியைச் சேர்ந்த அன்ரனி பவல் இனக் கலவரத்தைத் தூண்டும்வகையில் கூட்டங்களில் பேசியுள்ளதாகக் குறைகூறப்படுகின்றது.

இதுவரை வாழ்க்கைச் செலவு, கைத்தொழில் ஆகியன மட்டுமே தேர்தல் பிரசாரங்களில்இடம்பெற்றுவந்தன. திரு. பவலின் இப்பேச்சு நாட்டில் கலவரத்தைத் தூண்டக்கூடியதாக இருப்பதாகத் தொழிற்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

நிறத்தவர்களின் குடியேற்றம் நிறுத்தப்படவேண்டும் என்றும், புதிய பிரஜாவுரிமைச் சட்டம் இயற்றப்படவேண்டும் என்றும் திரு. பவல் கூறிவருகிறார்.

தேர்தல் நடைபெற இரு வாரம் இருக்கும்போது இன்று பிரிட்டனில் நடைபெற்ற பொதுஜன அபிப்பிராயவாக்கெடுப்பில்ஆளும் கட்சியான தொழிற்கட்சி கூடிய வாக்குகளைப் பெற்றுள்ளது. 4 5 கூடுதலான புள்ளிகளால் தொழிற்கட்சி முன்னணி வகிக்கிறது.

# பிக்குணி தீக்குளித்து மாண்டார்

சைகோன், ஜூன் 4

தென்வியட்னும் பௌத்த பிக்குணி ஒருவர் இன்று தனக்குத் தானே தீமூட்டித் தற்கொலை செய்து கொண்டார். வியட்நாமில் யுத்தம் நீடிப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக நகரின் முக்கிய இடமொன்றில் அமர்ந்துகொண்ட அந்தப் பிக்குணி தனது ஆடையில் பெற்ரோலை ஊற்றித் தீவைத்துமாண்டார்.

# இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிரவாரமாகிய இன்று, மாலை 6 மணி முதல் 7 மணிவரை வித்துவான் திரு. க. கி. நடராஜன் அவர்களினால் பெரிய புராண விரிவுரை தொடரில் 'பாண்டிநாட்டுக்கு வந்த அழைப்பு' என்ற பொருள் பற்றிய பிரசங்கமும் இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவமும் நிகழும்.

## பத்தாயிரம்பேர்

முசலி வியா

புதூர் நாகதம்பிரான் பொங்கல் வெகுவிமரிசையாக நடைபெற்றது பத்தாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இந்தப் பொங்கலில் பங்கு கொண்டார்கள்.

# 7 பேரைக் கொன்றவர் தாமும் தற்கொலை

## மஹியங்கனைப் பகுதியில் பயங்கரம்

கோட்டை, வியா.

கையில் துப்பாக்கியுடன் வீடுவீடாகச் சென்ற ஒருவர், தமது கண்ணுக்குப் பட்ட எல்லோரையும் சுட்டுக்கொன்று, தாமும் தற்கொலை செய்து கொண்ட பரபரப்பூட்டும் சம்பவம் ஒன்று ராஜாங்கனைப் பொலிஸ் பகுதியில் இருந்து அறிவிக்கப்படுகிறது.

தம்மாகம என்ற இடத்தில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. 7 பேரைச் சுட்டுக் கொன்ற விவசாயி ஒருவர் இறுதியில் தன்னைத் தானே சுட்டுக் கொன்றுமாண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் சம்பந்தமாகக் கூறப்படுவதாவது:

கையில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஒரு வீட்டுக்கு ஓடிய 40 வயது நிரம்பிய விவசாயி ஒருவர் அந்த வீட்டிலிருந்த கதிரா (55 வயது), சுனித்தா (45 வயது) ஆகிய இரு பெண்களை முதலில் சுட்டுக் கொன்றதாக கூறப்படுகிறது.

அதே வேகத்தில்வேறொரு வீட்டுக்கு ஓடும்போது வழியில் அகப்பட்ட 65 வயது நிரம்பிய பையா என்ற வயோதிபரைச் சுட்டுக் கொன்றார். வயோதிபரின் வீட்டுக்குள் புகுந்தவிவசாயி பத்தை(25 வயது), குணவதி (18 வயது), குணதாசா (8 வயது), சாகரா (வயது 80) ஆகியோரையும் சுட்டுவீழ்த்தினாராம்.

7 பேரையும் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற விவசாயி கடைசியில் தானும் தற்கொலை செய்து கொண்டார்.

மருமகள் முறையான ஓர் இளம் பெண்ணையும், பெருமகள் முறையான மற்றோர்பெண்ணையும் இவர் கெடுக்க முயன்றபோது குறிப்பிட்ட பெண்கள் கூக்குரலிட்டதாகவும், அதனைத் தொடர்ந்து அயலவர்கள் ஓடிவந்து விவசாயியின் முயற்சியைத் தடுத்ததாகவும் இதனைத் தொடர்ந்து இக்கொலைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பொக்கற்டோக்ஸ் பொமினேரியன் (Pominerian Pocket dogs) விற்பனைக்குள்ளன. இரண்டுமாத வெள்ளை ஆண் குட்டி ஒன்று 150 ரூபா N. தனபாலசிங்கம், 55 A, அரசடிவீதி, யாழ்ப்பாணம். 2281

இறக்குமதிக் கோழிகளின் கலப்பின விருத்திகள் யாழ்ப்பாண சுவாத்தியத்துக்கேற்ப பழக்கப்பட்ட ஒரு மாதக் குஞ்சு ரூபா 2/50 உடனே தொடர்பு கொள்ளவும். வை. விவேகநாதன், கூட்டுறவுக் கோழிப் பண்ணை, ஆனைக்குட்டி ஒழுங்கை, தெல்லிப்பழை. 2283

### தேவை

ஆசிரியர்கள்:

கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சைக்கு (G. C. E. Ordinary) ஆயத்தம் செய்யும் மாணவர்களுக்கு பாடங்கள் எவற்றிலேனும் கல்வியூட்டத் தகமை பூண்ட ஆசிரியர்கள் தேவை. முழு விபங்களுடன் பின்வரும் முகவரிக்கு ஆனி 11-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்க. Director, youth study Centre Post Box 2, Jaffna. 2280

### கல்வி

ஜி. சி. ஈ. (சாதாரணம்) கலை/விஞ்ஞானம், (உயர்தரம்) கலை, ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரவேசம், விசேட ஆங்கிலம், சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம் பகல்/மாலை வகுப்புகளுக்கு பிரவேசங்கள் ஏற்கப்படுகின்றன. மகளிருக்கு தனி விடுதி. யூனைட்டெட் அக்கடெமி, நெல்லியடி. 2274

## பிரதமருக்கு நன்றி

பருத்தித்துறை, வியாழன்

''சிறுபான்மைத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ நிறுவனமாகிய சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரான திரு. எம். சி. சுப்பிரமணியத்தை நியமன அங்கத்தவராக்கிய தங்களை மனமார வாழ்த்துவதுடன் தொடர்ந்து தங்கள் கட்சிக்கு எமது ஆதரவை அளிக்கவும் உறுதி தருகிறோம்'' எனக் கூறும் கனுவில் சனசமூகநிலையம் தந்தியை பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பியுள்ளது.

## திருநாள்

முசலி, வியாழன்

மன்னார்ப் பகுதியில் மிகவும் பிரபலமடைந்து வரும் தள்ளாடி புனித அந்தோனியார் திருவிழா இவ்வாரம் தொடங்குகின்றது. 13-ந் திகதி இறுதி உற்சவம் விமரிசையாகக் கொண்டாடப்படும். இதற்கான ஆயத்தங்களை மன்னார் பிரிவு தலைமைச் சுவாமியார் வண. கே. பி. சந்தியாப்பிள்ளை எடுத்து வருகின்றார்.

### உபநயன அழைப்பு

நிகழும் சாதாரண ஸ்ரீ வைகாசி மீ 24 உ (7-6-70) ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி வரையில் வரும் சுபவேளையில் நடைபெறவுள்ள எமது புத்திரன் செல்வன் விஜயகுமாரின் உபநயன வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு நண்பர்களையும் உறவினர்களையும் கேட்டுக்கொள்ளுகிறோம். கா. ம. யோகீசுவரன் வரதாம்பிகை, நீராவியடி, யாழ்ப்பாணம். 2133

## கேள்வி விளம்பரம்

### மாந்தை மேற்குக் கிராமச் சபை திருக்கேதீச்சரம்

1970-ம் ஆண்டு ஆனி மாதம் 23-ம் திகதி காலை 9-00 மணிவரை பின்வரும் அரசினர் நன்கொடைவேலைகளுக்கு மாந்தை மேற்குக் கிராமச் சபைத் தலைவரால் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) மாந்தை மேற்குக் கிராமச் சபை அலுவலகக் கட்டிட வேலை.

(2) மினுக்கன் சேரி ஒழிப்பு வீட்டுத்திட்டவேலை.

கேள்விப் பத்திரங்கள் மன்னார் பகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அதே திகதியிலும் அதே நேரத்திலும் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

உத்தியோகபூர்வமான கேள்விப்பத்திரத்தின் கிரயம் 10/- ரூபாவும் (இப் பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது) பிணைப்பணம் (100/-) நூறு ரூபாவும் கட்டி கேள்விப்பத்திரங்களை அலுவலக நேரத்தில் கிராமச் சபைக் காரியாலயத்தில் 15-6-70-ம் திகதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமராமத்து இலாகாவில் 15,000/- ரூபாவுக்கு மேல் பதியப்பட்டவர்களுக்கு மட்டும் ரெண்டர் பத்திரம் கொடுக்கப்படும்.

இதுசம்பந்தமான விபரங்கள் யாவும் மாந்தை மேற்குக் கிராமச்சபைக் காரியாலயத்திலும், மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பி. பறுணந்து
அக்கிராசனர்,
மா. மே. கி. சபை,
28-5-70

கி. ச. அலுவலகம்,
மாந்தை மேற்கு,
திருக்கேதீச்சரம். 2292

பண்டத்தரிப்பில்

## பஸ் விபத்து: பலர் காயம்

சுழிபுரம், வியாழன்

பண்டத்தரிப்பு சந்திக்கு அருகாமையில் இரு இ. போ. ச. பஸ் வண்டிகள் நேற்றுக் காலை மோதிக் கொண்டன. இவ்விபத்தில் பலர் காயத்துக்குள்ளாகியுள்ளனர். பஸ்சாரதி ஒருவரின் கைமுறிந்துள்ளதாம் பஸ்களுக்கும் சேதமேற்பட்டது.

### சாவகச்சேரி நகரசபை

## கேள்விப்பத்திர விளம்பரம்

1. பின்னால் விபரிக்கப்படும் வேலைகள் செய்துமுடிப்பதற்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன:

### வேலைகள்

(1) 1-ம் வட்டாரம்: மீசாலை தெற்கு வங்களா வீதியில் கிணறு கட்டுதல்.

(2) 9-ம் வட்டாரம்: விளையாட்டு மைதானத்தின் தளபாடங்களை வாடிவீட்டுக் காணியில் அமைத்தல்.

(3) 9-ம் வட்டாரம்: பழைய மின்சாரக் கட்டிடத்திற்கு வெள்ளையடித்தல்.

2. இந்நகரசபை அலுவலகத்தில் கேள்விப்பத்திர வைப்புப்பணமாக ரூபா 25/-ம் கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 5/-ம் கட்டியெடுக்கும் கேள்விப்பத்திரத்திலேயே கேள்விகள் கேட்கப்படவேண்டும். கேள்விப் பத்திரப் பணம் ரூபா 5/-ம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

கேள்விப்பத்திரங்கள் 16-6-70 ம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் இந்நகரசபை அலுவலகத்தில் கொடுக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் யாவும் காகித உறைக்குள் வைக்கப்பட்டு உறையின் மேற்பக்கத்தில் இடதுபுறமாக அவ்வவ் வேலைக்குரிய பெயரை எழுதி. தலைவர், நகரசபை சாவகச்சேரியென விலாசமிட்டு உறைக்கு மெழுகுபோட்டு அடையாளம் வைத்து 1970-ம் ஆண்டு ஆனிமாதம் 17-ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு முன் இந்நகரசபை அலுவலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடவேண்டும். அல்லது தபால்மூலம் பதிவுசெய்து அனுப்பவேண்டும்.

3. கேள்விப்பத்திரங்களில் காணப்படும் கேள்விகளில் திருத்தங்கள் ஏற்படின் அவ்வித திருத்தங்கள் கேள்விக்காரரின் ஒப்பம் பெற்றிருக்கவேண்டும்.

4. தெரிந்தெடுக்கப்படும் கேள்விக்காரன் கேள்வித் தொகையின் பத்திலொரு பங்கைப் பிணைப்பணமாகச் சபைத் தலைவர் அறிவிக்கும் திகதிக்குள் கட்டவேண்டும். கட்டிய பின்பே ஒப்பந்தம் எழுதப்படும்.

5. செய்யவேண்டிய வேலைகளைப்பற்றிய முழு விபரங்களும் கேள்விகள் கேட்கப்படமுன்பே இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளவேண்டும், எவ்வித காரணங்களைக் கொண்டும் வேலை விபரங்கள் தெரியாதென ஒப்பந்தகாரர் சொல்லக்கூடாது.

6. மேலதிக வேலைகளிருப்பின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி வீதங்களின்படி கணக்கு முடிக்கப்படும். கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்படாத வேலைகள் செய்யப்படவேண்டியிருப்பின் சபைத்தலைவர் குறிக்கும் வீதத்திற்குச் செய்யவேண்டும்.

7. எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் தள்ளிவிடத் தலைவருக்கு அதிகாரமுண்டு.

8. ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்தகாரன் குறித்த காலத்தில் வேலைசெய்து முடிக்காவிடின் சபை அவ்வேலைக்குப் பொறுப்பாயிராது. ஆனால் முக்கிய காரணம் பற்றி எழுத்துமூலம் சபைத்தலைவரிடமிருந்து தவணை பெற்றுக்கொள்ளலாம்.

9. வேலை திருப்தியாகச் செய்யப்பட்டதென்று அறிவித்த பின்புதான் ஒப்பந்தக் காசு கொடுக்கப்படும்.

10- ஒப்பந்தக்காசு கொடுத்து மூன்று மாதங்களுக்குப் பின்புதான் வேலையில் ஒருவித பிழையும் காணப்படாவிடின் பிணைக்காசு கொடுக்கப்படும்.

11. இவைகளைப்பற்றி இன்னும் விபரங்கள் அறியவேண்டின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளலாம்.

சு. கனகரத்தினம்,
தலைவர்
நகர சபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி-24-5-70. 2293

## பேச்சுப்போட்டி முடிவுகள்

ஊர்...
சரவணை...
சங்கத்தினரால் சம்பந்தர்

## பெண்களும் மொட்டையடித்தனர்

சுழிபுரம், வியா

வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த ...பேட்சக

ஆசிரியருக்கு கடிதம்

## சந்தரணம்

18-5-70 'ஈழநாடு' பத்திரிகையில் திரு. வை. ச. செந்தில்நாதன் புதன்சூரிய பிம்பத்தின் மேல் ஊர்ந்துசெல்வதுபோலத் தோற்றும் நிகழ்ச்சிக்கு கிரகணம் என்ற சொல்லே சரியென்றும், சந்தரணம் என்ற சொல் பிழையென்றும் அப்படி ஒரு சொல் இல்லையென்றும் எழுதியிருந்தார்.

கிரகணம், சந்தரணம் ஆகிய இரு சொற்களும் வடமொழிச் சொற்களேயன்றித் தமிழ்ச்சொற்கள் அல்ல. த்ரு + அந = தரண கடத்தல், ஸம் + தரண = ஸந்தரண- நன்கு கடத்தல் ஆகவே சந்தரணம் என்பது கடத்தல் என்று பொருள் படுகின்றது. க்ருஹ்' என்பது பிடித்தல் என்பது பிடித்தல் க்ருஹ் என்ற வினையடியிலிருந்து கிரகணம் என்ற சொல்லும், த்ரு என்ற வினையடியிலிருந்து தரணம் என்ற சொல்லும் வந்தது என்பதை நன்கு கவனிக்கவும்.

இராகு சந்திரனையும், கேது சூரியனையும் பிடித்தல் கிரகணம் என்று சொல்லப்படும் என்பதே மகரிஷிகளின்கருத்தாகும் ஆகவே கிரகணம் என்ற சொல்லுக்கு மறைத்தல் என்று நாம் பொருள் கொள்கின்றோம். அதேபோல சந்தரணம் என்ற சொல்லுக்கு கடத்தல் என்றுதான் பொருள் கொள்ளவேண்டுமே தவிர மறைத்தல் என்று பொருள் கொள்வது தக்கதன்று. புத சந்தரணம் என்று சொல்லும் போது புதன் சூரியனைக் கடக்கின்றது என்பதே கருத்தாகும். உப ஸர்க்கம் ஸம் என்று சேரும்போது ஸந்தரண என்ற சொல் வழக்கில் இல்லையே தவிர அது சொற்பிழையன்று.

ஆங்கிலத்தில் கிரகணத்திற்கு Eclip எக்ளிப்ஸ் என்றும், கடத்தலுக்கு Transit என்றும் கூறியிருக்கிறார்கள். Eclipse of Mercury என்றும் கூறாமல் Transit of Mercury என்று கூறியிருப்பதால் Eclip, Transit ஆகிய இரு சொற்களும் ஒரே செயலை உணர்த்தா என்பதை நன்கு உணரவும். Eclipse என்பது மறைத்தல் என்றும் Transit என்பது கடத்தல் என்றும் பொருள்படுவதை அவதானிக்க சூரியன் சந்திரன் மறைக்கப்படுவதற்கு சூரிய கிரகணம், சந்திரகிரணம் என்றும் புதன் சூரியனைக் கடக்கும் நிகழ்ச்சிக்குப் புத சந்தரணம் என்றும் கூறப்படுகிறது.

எமது திருக்கணித பஞ்சாங்கம் தொட்டு எமது

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்—கே. ஆர். விஜயா
நாகேஷ்—வி கே. ராமசாமி
நடித்த
பெண்ணை வாழ விடுங்கள்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30 10-00
போயா, பிரிபோயா 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
நாகேஷ் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த
பெண்ணை வாழ விடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகேஷ் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த
**பெண்ணை வாழ விடுங்கள்**

இப்பொழுது திரையிடப்படுகிறது
**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

★ ஜெய்சங்கர்
★ ஜெயலலிதா
★ நாகேஷ் ★ சுந்தரராஜன்
நடித்த
**முத்துச் சிப்பி**

இப்பொழுது திரையிடப்படுகிறது
**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
**எம்.ஜி.ஆர். ஜெயலலிதா**
**நாகேஷ் ரெங்கராவ்**
மற்றும் பலர் நடிந்த





கள் நேற்றுக் காலை மோதிக் கொண்டன. இவ்விபத்தில் பலர் காயத்துக்குள்ளாகியுள்ளனர். பஸ்சாரதி ஒருவரின் கைமுறிந்துள்ளதாம் பஸ்களுக்கும் சேதமேற்பட்டது. காயமடைந்தோர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். பொலிஸ் விசாரணை நடைபெறுகிறது.

## சுவாமி பூரி மகராஜ்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடஇந்தியாவைச்சேர்ந்த சுவாமி புவனானந்தபூரி மகராஜ் யாழ்ப்பாணம் வைமன் வீதியிலேலுள்ள 'அருளக'த்தில் தினசரி காலை 5 மணிக்கும் 6 மணிக்கும் இடையிலும் மாலையில் 6க்கும் 7க்கும் இடையிலும் தியான வகுப்புகள் நடத்துகின்றார். ஒரு வாரம் இங்கு அவர் தங்கியிருக்கலாம். தியானத்தாலேயே நாம் தெய்வீக மனிதராகி, பேரானந்தமடைய முடியுமென்கிறார்.


**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
கல்யாணகுமார் - விஜயலக்ஷ்மி
நடித்த
**தாயில்லாப் பிள்ளை**

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
எம். ஜி. ஆர்.—மாலினி
நடித்த
**சபாஷ் மாப்பிள்ளை**

**REGAL** JAFFNA
Daily 3 Shows
Poya Prepoya 4 Shows
Hayley Mills
in
THAT DARN CAT

**ராஜா** (யாழ்ப்பாணம்)
Daily 3 Shows
Bobby Darin,
Emily Bank's
in
GUN FIGHT
IN
ABILENE
(cinemas cope & color)


## பேச்சுப்போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை, வியா.

சரவணை சைவஇளைஞர் சங்கத்தினரால் சம்பந்தர் குருபூசை தினத்தன்று நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:-

செல்வன் க. சூலபாணி, செல்வி மு. குலமணி, செல்வி ந. பிரேமாவதி, செல்வி த. அருந்தவராணி, செல்வி வீ. தேவிகா.

பண்டிதர் வை. இராமகிருஷ்ணஐயர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## நீதிமன்றத்தில் சிங்களம்

கொழும்பு, வியாழன்

புதிய நீதியமைச்சர் திரு. ஜே. எம். ஜெயமனே மிக விரைவில் நீதிமன்றஅலுவல்களைச் சிங்களத்தில் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறார்.

இந்த நடவடிக்கை தேர்தல் காலத்தில் ஐக்கிய முன்னணி மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவுசெய்யும் வகையில் எடுக்கப்படுகிறது. என நீதியமைச்சர் கூறினார்.

முதலில் கீழ்கோடுகளிலும் பின்னர் உயர் நீதிமன்றங்களிலும் நீதிமன்ற மொழிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

## நிலக்கடலை உற்பத்தி விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

இவ்வாண்டு பெருந்தொகையாக நிலக்கடலை விளையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த காலத்தில் வவனியா மாவட்டம் நிலக்கடலை உற்பத்தியிலும் வெற்றிகண்டுள்ளது.

யாழ்ப்பாண விவசாய விஸ்தரிப்பு இலாகாவினர் நேரில் சென்று கடலை உற்பத்தி நிலைமைகளை ஆராய்ந்து ஊக்கமளித்து வருகின்றனர்.

## ஆங்கில ஆசிரியர் இல்லை

பருத்தித்துறை. வியா.

வடமராட்சிப் பகுதியில் உள்ள பல பாடசாலைகளில் க. பொ. த: உயர்தர வகுப்புகளில் ஆங்கில மொழி போதிப்பதற்கான ஆசிரியர் இல்லையெனத் தெரியவருகிறது ஆனால் இவ்வகுப்புகளில் ஆங்கில மொழி அவசியம் போதிக்கப்படவேண்டுமென்று கல்விப் பகுதிச் சுற்றுநிருபமொன்று கூறுகிறது.

## பெண்களும் மொட்டையடித்தனர்

சுழிபுரம், வியா

வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த ... பேட்சகரின் ஆதரவாளர்கள் 104 பேர் தமது தலைமயிரை மொட்டையடித்துக் கொண்டனர் இவர்களில் பெண்கள் மூவராவர். மொட்டையடித்தவர்களில் அநேகர் பண்டத்தரிப்பு, காரைநகர், பண்ணாகம் ஆகிய கிராமங்களைச் சேர்தவர்களாவர்.

0 0 0

யாழ்ப்பாணம், வெள்ளி

வெவ்வேறு கட்சிப்பற்றுள்ள இ. போ. ச. ஊழியர்கள் இருவர் அண்மையில் நடந்த தேர்தல் பந்தயத்தைத் தொடர்ந்து தலையை மொட்டை அடித்துக்கொண்டார்கள்.

## இன்று சங்காபிஷேகம்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம்-பறுளாய் சிவசுப்பிரமணிய கோவில் நவோத்தர சகஷ்ர மஹா சங்காபிஷேகம் இன்று காலை 10 மணி தொடக்கம் நடைபெறும். பகல் அபிஷேக அர்ச்சனைகளும் இரவு சுவாமி வீதிவலம் வருதலும் நிகழும். இசைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்

0 0 0

ஊர்காவற்றுறை, வெள்ளி

வடபகுதியில் பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் ஒன்றான நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவம் இன்று ஆரம்பமாகிறது.

வழமைபோல் 'அமுதசுரபி' மடாலயத்தில் அன்னதானத்தை நடத்துவதற்கு நயினை அன்னதான சபையினர் தீர்மானித்துள்ளனர்.

## கொழும்பு மாவட்ட நீதிபதியாக சிறிமன்ன

கோட்டை, வியாழன்

கண்டி மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய திரு டி. கியு. எம். சிறிமன்ன இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கொழும்பு மாவட்ட நீதிபதியாகக் கடமையேற்றுள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. ஜி. ஏ. நிசங்கா அசைஸ்கமிஷனராக நியமனம் பெற்றதிலிருந்துபதில் மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்த திரு. டி. விமலரத்ன கொழும்பு மாவட்ட நீதிபதியாக நியமனம் பெற்றுள்ளார்.

என்றும் புதன் சூரியனைக் கடக்கும் நிகழ்ச்சிக்குப் புதசந்தரணம் என்றும் கூறப்படுகிறது.

எமது திருக்கணித பஞ்சாங்கம் தொட்டு எமது குரு. திரு எஸ். விசுவநாத சிரௌதிகள் அவர்களும், பலபாஷா விற்பனராகவும் கோயம்புத்தூர் அரசாங்கக் கல்லூரியில் சமஸ்கிருத பண்டிதராகவும் கடமையாற்றிய பிரம்மஸ்ரீ ஏ.குப்புசாமிசாஸ்திரிகள் அவர்களும் சந்தரணம் என்ற சொல்லையே பாவித்து வந்திருக்கிறார்கள்.

சி. சுப்பிரமணிஐயர்
எப். ஆர். ஏ. எஸ்.
மட்டுவில்,
சாவகச்சேரி.

[இத்துடன் இவ்விஷயம் தொடர்பான கடிதத் தொடர் நிறைவு பெறுகின்றது. — ஆசிரியர்]

## ஏன் அவசரம்?

யாழ்ப்பாண மாநகரசபை பிரதமருக்கு வரவேற்பு கொடுக்கவேண்டுமென ஓர் பிரேரணை கொடுத்திருப்பதாக ஒரு செய்தி வெளிவந்திருந்தது. இந்த அரசாங்கத்தில் தமிழருடைய நிலையென்ன? ஒன்றும் சரியாக தெரியாமல் இருக்கையில் பிரதமருக்கு வரவேற்பளிக்க ஏன் அவசரப்படவேண்டும்?

வரும் காலத்தில் வரவேற்புகள் டாம்பீகமாகவும், அனேக பணமும் செலவு செய்து ஊர்வலம் மாலைகள் பந்தல்கள் கும்பங்கள் வைக்காமல் சாதாரணமாகவைக்க வேண்டும்.

சி. முத்துக்குமாரசாமி
மானிப்பாய்

## மின் இணைப்பு கிடைத்தது

மட்டுவில், வியாழன்

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் மின் இணைப்பை நிலையத் தலைவர் திரு. வெ. யேசுதாசன் ஆரம்பித்துவைத்தார். உபதலைவர் திரு. வே. சின்னத்தம்பி வைபவத்திற்குத் தலைமைவகித்தார். ''பகல்முழுதும் வேலைக்குச் சென்றுவிட்டு, பத்திரிகை புத்தகங்களை இரவில் படிக்க போதிய வெளிச்ச வசதியின்றிக்கஷ்டப்பட்ட இப்பகுதி மக்களின் நீண்டகாலக் குறை பூர்த்தியானது'' என திரு. யேசுதாசன் பேசுகையில் குறிப்பிட்டார். திருவாளர்கள் வி. ஏ, கந்தசாமி, வ: நடேசன். மு. சின்னையா ஆகியோர் உரையாற்றினார்.




**'அல்கதீன்'**

**உபயோகிப்பதற்கு மிக இலகுவான குழாய், நீளம் வாய்ந்தது - எளிதாய் வளைந்துகொடுப்பது**

கமத்தொழிலுக்கும், உணவு உற்பத்திக்கும், இன்று ஏற்பட்டுள்ள பெரும் பிரச்சினை, இலகுவானதும், திறம்பட்டதும், செலவு குறைந்ததுமான நீர்ப்பாய்ச்சு முறை எது என்பதுதான்.

**அல்கதீன் அப் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கிறது.**

நெடு நீளம் வாய்ந்தது, எளிதில் வளைந்து கொடுப்பது, எடை குறைந்தது, பிரித்தமைக்கக்கூடிய மூட்டுகள் கொண்டது, செலவு குறைவானது, அரிக்கப்பட்டு அழிந்தொழியாதது, நொருங்காதது, உராய்வுச் சேதம் இல்லாதது.

**இவற்றுடன் இன்னும் எத்தனையோ குணநலங்கள்!**

கமத்தொழில், கட்டிட அமைப்புகள், வீடமைப்பு ஆகியவற்றில் நீர் வசதி பற்றிய பிரச்சினை எது எழுந்தாலும்-அல்கதீன் அவற்றை விரைவாக நீக்கி வைக்கும்.

**'அல்கதீன்'**
பிற குழாய் வகைகள் யாவற்றிலும் சிறந்து விளங்குவது!

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்.,
தபாற் பெட்டி இல: 352, கொழும்பு.
AJNS.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடியா: அதிபர் நிக்ஸனுக்கு பூரண அதிகாரம் வழங்க அமெரிக்க செனட் மறுப்பு

வாஷிங்டன், ஜூன் 4
கம்போடியா சம்பந்தமாக
எந்த நடவடிக்கையையும்
மேற்கொள்வதற்கு அதிபர்
ரிச்சார்ட் நிக்ஸனுக்குமுழுச்
சுதந்திரம் அளிக்கப்பட
வேண்டுமென்ற யோச
னையை அமெரிக்க செனட்
சபை நிராகரித்துவிட்டது.
செனட்டின் இந்தமுடிவுக்
குப்பின் அதிபர் நிக்ஸன்
நிகழ்த்தியஉரையில்கம்போ
டிய நிலைமை பற்றி எடுத்
துக் கூறினார்.

இந்தோசீன சம்பந்தமா
கத் தாம் மேற்கொண்டநட
வடிக்கைகள் பெரும் பயன
ளித்துள்ளதாகவும் அவர்
சொன்னார்.

கம்போடியாவுக்கு அனுப்
பப்பட்ட 50,000 அமெரிக்
கத் துருப்புக்களில் 15,000
துருப்புக்கள் தென்வியட்னா
முக்குத் திரும்பிவிட்டதாக
வும் மிகுதித் துருப்புக்களும்
இம்மாத முடிவுக்குள் தென்
வியட்னாமுக்குத் திரும்பிவிடு
மென்றும் அதிபர் நிக்ஸன்
கூறினார்.

## இஸ்ரேல் – அரபு சண்டை
### ஜோர்டான் பகுதியில் 9 பேர் பலி

கெய்ரோ, ஜூன் 4
மேற்காஸியாவில் சூயஸு
க்குக்குறுக்கே இஸ்ரேலியரு
க்கும் ஐ. அ. குடியரசுப்
படைகளுக்மிடையே நேற்
றுக் கடும்சண்டை நடந்தது
இச் சண்டை பத்துமணி
நேரம் நீடித்தது.

இரண்டு இஸ்ரேலியபோர்
விமானங்களைத் தாங்கள்
சுட்டுவீழ்த்தியதாக ஐ. அ.
குடியரசு தெரிவித்தது.

ஜோர்டானிலும் கலிலி
கடற்பகுதியில் இஸ்ரேலிய
ருக்கும் ஜோர்டானியருக்கு
மிடையில்கடும் சண்டை
நடந்தது. இச்சண்டையில்
9 பேர் கொல்லப்பட்டனர்.
50பேர் காயமடைந்தனர்.

ஜோர்டான் பள்ளத்தாக்
குப்பகுதியில் ஜோடானியர்
நடத்திய தாக்குதலில் இரு
பள்ளிப்பிள்ளைகள் கொல்
லப்பட்டனர். இத் தாக்கு
தல் சம்பந்தமாக ஐ நா.
பாதுகாப்புச் சபைக்கு இஸ்
ரேல் புகார் செய்திருக்கி
றது.

## "5 ஆண்டுகள் ஆசிரியர்கள் பழிவாங்கப்பட்டனர்"

கோட்டை, வியா
'கடந்த 5 வருடங்களைப்
போல மிகவும் மோசமான
காலம் வேறு எக்காலத்தி
லும் இருந்ததில்லை. கடந்த
காலத்தில் இளம் சந்ததி
யினரைச் சரியான முறை
யில் வழி நடத்திய ஆசிரிய
ர்கள் மிகவும் மோசமான
முறையில் பழிவாங்கப் பட்
டனர். கல்வி மந்திரி இக்
காலத்தில் தகுதியும் பொறு
ப்புமற்றவர்களை நியமித்து
கல்வியை சீர்கெடுத்தார்'

ஐக்கிய முன்னணியின்
வெற்றி குறித்து கல்வி மந்
திரி அலுவலகத்தில் நடை
பெற்ற கூட்டத்தில் ஜாதிக
குரு சங்கமாயவின் தலைவர்
திரு. டீ. பீற்றர் சில்வா
மேற்கண்டவாறு கருத்துத்
தெரிவித்தார்.

இக் கூட்டத்தை அகில
இலங்கை ஐக்கிய ஆசிரியர்
சங்கம், எழுது வினைஞர்
சங்கம், மற்றுமுள்ள கிளை
கள் ஒன்றாகச் சேர்ந்து நட
த்தின.

திரு. சில்வா மேலும்பேசு
கையில் 'இலங்கை உட்பட
உலகம் முழுவதிலும் வரலா
ற்று ரீதியாக ஆசிரியர்களை
கடவுளாகவே கணித்து வரு
கின்றனர். கடந்த 5 வருட
ங்களில் கல்வி மந்திரி ஆசிரி
யர்கள் மீது கல்லையே எறி
ந்து கொண்டிருந்தார். புதிய
மக்கள் அரசாங்கம் இப்பொ
ழுதைய தேவையற்ற
வற்றை நீக்கி, கல்வியில்
ஒரு புதிய மாற்றத்தை ஏற்
படுத்த தனது சக்தியையும்
நம்பிக்கையையும் பயன்
படுத்தும்'

லங்கா ஜாதிக குருசங்க
மயவின் முன்னாள் செயலா
ளர் திரு. எல். ஆரியவ
ன்சா பேசுகையில் முன்னைய
தேசிய அரசாங்கம் பழிக்
குப்பழி வாங்கும் எண்ணத்
துடன் நாலாயிரத்திற்கு
மேற்பட்ட ஆசிரியர்களை
தங்கள் விருப்பப்படி இட
மாற்றஞ் செய்து வந்திருக்
கிறது என்றும், கல்விப் பகு
தியில் மட்டுமன்றி மற்ற
எல்லாத் துறைகளிலும்
ஐக்கிய முன்னணி அரசாங்
கம் புதிய உத்வேகத்துடன்
செயல்பட்டு நாட்டு மக்க
ளின் வாழ்வுக்கு நலந்தே
டும் என்றும் சொன்னார்.

## கல்வி அமைச்சரை வரவேற்க ஏற்பாடு

## கார் திருட்டு கண்டுபிடிக்க புதிய சாதனம்

லண்டன், ஜூன் 4
பிரிட்டனில் இப்பொழுது
கண்டு பிடிக்கப்பட்டிருக்கும்
அதிசய சாதனம் ஒன்று
கார் திருட்டுகளுக்கு விரை
வில் முற்றுப்புள்ளி வைத்து
விடும். 100 மைல் தூரத்
திற்கு அப்பாலும் தமது
கார் திருடப்படுவதை இந்த
சாதனம் மூலம் ஒருவர்
அறிந்து கொள்ளலாம். அது
மட்டுமன்றி கார் களவா
டப்படுவதை அவர் உட
னடியாகத் தடுத்தும்விட
லாம்.

இரு சிறிய மின்னணுச்
சாதனங்கள் இந்த மகத்
தான சாதனையைச் செய்து
விடுகின்றன. காருக்கும்
காரின் சொந்தக்காரருக்
கும் மத்தியில் மிக நுட்ப
மான தொடர்பை ஏற்
படுத்தி, காருக்கு ஏற்படும்
ஆபத்தை அறிவித்துவிடு
கின்றன இந்த சாதனங்கள்.
ஒன்று காரின் இயக்கு
பொறியில் பொருத்தப்பட்
டிருக்கும். சிறிய பேனை
போன்ற வடிவத்திலுள்ள
மற்றச் சாதனத்தை கார்
சாரதி தனது பாக்கட்டி
னுள் வைத்துக் கொள்ள
லாம். சாரதி இல்லாத சம
யம் பார்த்து காரை யாரா
வது 'ஸ்டார்ட்' செய்து
ஓட்டமுயன்றால் சாரதியின்
பாக்கட்டிலிருக்கும் நுண்
ணிய தகவல் ஈர்ப்பு சாத
னம் உடனடியாக 'அபாய
அறிவிப்பைக்' கொடுத்து
விடும். உடனே சாரதி தம்

## புதுமாதிரியான வேலைநிறுத்தம்

டோக்கியோ, ஜூன்4
கைத் தொழில் நிறுவனத்
தில் வேலை செய்யும் தொழி
லாளர்கள் தமது கோரிக்
கைகள் நிறைவேற்றப்படா
விட்டால் அதற்கு எதிர் நட
வடிக்கையாக வேலைநிறுத்த
த்தில் ஈடுபடுவது வழக்கம்.
ஆனால் ஜப்பானில் அப்படி
அன்று ஜப்பான் தொழிலா
ளர்கள் வேலை செய்து
கொண்டே வேலைநிறுத்தில்
ஈடுபடுவார்களாம்.

தொழிலாளர்களுக்கும்
நிர்வாகத்திற்கும் தகராறு
ஏற்படும் பட்சத்தில் வேலை
நிறுத்தம் செய்யவேண்டிய
அவசியம் ஏற்படின் தொழி
லாளர்கள் தமது கையில்
ஒரு அடையாளத்தைக் கட்
டிக் கொண்டு தொழிற்
சாலையில் வேலை செய்வர்
அவ்வாறு கையில் கட்டி
உள்ள அடையாளம் அவர்
கள் வேலை நிறுத்தம் செய்
கின்றார்கள் என நிர்வாகத்
தினரை உணரவைக்குமாம்.

உடனடியாக தொழிற்
சங்க பிரமுகர்களை நிர்வாக
த்தினர் அழைத்து பேச்சு
வார்த்தை நடாத்தி சமர
சத்திற்கு வருவார்களாம்.

## 200,000பேர் வரட்சியால் பாதிப்பு

பிறேசிலியா ஜூன், 4
வரட்சியால் பாதிக்கப்
பட்ட வடமேற்குப்பிறேசி
லிலுள்ள பட்டினியால்
வாடும் ஆயிரக்கணக்கான
விவசாயிகள் உணவுக்காக அப்
பகுதியிலுள்ள கிராமங்களு
க்குச் சென்று அங்குள்ள
கடைகள் வீடுகள் ஆகிய
வற்றைச் சூறையாடினராம்
இத்தகைய நிலையில் 200000
வரட்சியால் பாதிக்கப்பட்ட
மக்கள் உள்ளார்கள் எனத்
தெரியவருகிறது

கடந்தவாரம் இங்குள்ள
போட்டலேசா என்ற நகரு
க்கு அருகே உணவுப் பொரு
ட்கள் கொண்டு சென்ற 6
புகையிரதங்கள் மேற்படி
விவசாயிகளால் மறிக்கப்
பட்டுச் சூறையாடப்பட்ட
னவாம்.

## அதிசயக்

## புதிய நிரந்தரக் காரியதரிசிகள்

கொழும்பு, வியாழன்
புதிய அரசு புதிய எட்டு
நிரந்தரக் காரியதரிசிகளை
நியமித்துள்ளது.

நிதிஅமைச்சின் நிரந்தரக்
காரியதரிசியாக வழக்கறிஞ
ரான திரு. நிகால் ஜய
விக்கிரமா நியமிக்கப்பட்
டுள்ளார்

காணிவிவசாய அமைச்சின்
நிரந்தரக்காரியதரிசியாக
முன்பு உரக்கூட்டுஸ்தானத்
தலைவராக கடமையாற்றிய
திரு. மகிந்த சில்வா நிய
மனம் பெற்றுள்ளார்.

கப்பல் போக்கு வரத்து
உல்லாசப்பிரயாணத்
தொழில் அமைச்சுக்கு நிரந்
தரக் காரியதரிசியாக, திறை
சேரி பொருளாதார விவ
கார இயக்குநர் திரு. பி. பி.
கரந்தவெலவும், தகவல்
ஒலிபரப்பு அமைச்சின் நிரந்
தரக்காரியதரிசியாக முன்
னாள் வித்தியோதய பல்
கலைக்கழக விரிவுரையாள
ரும், வழக்கறிஞருமான
திரு. எஸ். திஸநாயக்கா
நியமிக்கப்பட்டுள்ளனர்

மற்றும் நிரந்தரக்காரிய
தரிசிகள் வருமாறு:

கலாச்சார அமைச்சு: இவ்
வமைச்சின் சிரேஷ்ட உதவி
நிரந்தரக்காரியதரிசியான
திரு நிசங்கா விஜயவர்த்
தன, உள்நாட்டு வெளி
நாட்டு வர்த்தகஅமைச்சு:
திறைசேரி பொருளாதாரப்
பிரிவின் முன்னாள் தலைவர்
கலாநிதி ஜே. பி. கெலகம,
சமூகசேவை அமைச்சு:
தற்பொழுது களுத்துறை
அரசாங்க அதிபராகக்
கடமையாற்றும் திரு. லீல்
குணசேகரா, சுகாதார
அமைச்சு: கண்டியில் வைத்
தியராக இருக்கும் டாக்டர்
சி. எஸ். வீரதுங்கா.

பேராசிரியர் எச். ஏ, டி.
எஸ். குணசேகரா இலங்கை
வங்கித் தலைவராகவும், திரு.
ஏ. பி எதிரிசிங்கி டைரக்ட
ராகவும் நியமனம் பெறு
வார்கள் என எதிர்பார்க்கப்
படுகின்றது.

திரு. ஹெக்டர் அபயவர்
த்தன மக்கள் வங்கி டைரக்
டர் சபைத் தலைவராக நிய
மிக்கப்பட்டுள்ளார்.

திரு. எம். எஸ். அலிவ்
மந்திரிசபைக் காரியதரிசி
யாகநியமிக்கப்பட்டுள்ளார்.

"கூட்டணி விஞ்ஞாபனப்படி

# 3 பல்கலைக்கழகங்கள் அமையும் என்பதில் நம்பிக்கையுண்டு"

யாழ்ப்பாணம் வெள்ளி
'கூட்டரசாங்கம் மீண்டும்
பதவிக்கு வந்துள்ளதால்,
விரைவில் யாழ்ப்பாணத்தில்
இராமநாதன் பல்கலைக்கழ
கம் நிறுவப்படும் என்ற
நம்பிக்கை தமிழ் மக்களுக்கு
ஏற்பட்டுள்ளது கூட்டாட்சி
கட்சிகளின் தேர்தல்விஞ்ஞா
பனத்தில் வடக்கிலும், கிழக்
கிலும், தெற்கிலும் பல்கலைக்
கழகம் நிறுவப்படும் என்று
கூறப்பட்டிருப்பதால். வடக்
கில் பல்கலைக்கழகம் நிறுவும்
முயற்சியை இனிமேல்எவரும்
எதிர்க்க மாட்டார்கள்
என்ற நம்பிக்கை எனக்கிருக்
கிறது

தென்மராட்சி கிழக்கு
இராமநாதன் கழக அங்கு
ரார்ப்பணக் கூட்டத்தில்,
உசன் இராமநாதன் மகா
வித்தியாலய அதிபர் திரு.
எஸ். சிவப்பிரகாசம் பேசும்
போது மேற்கண்டவாறு
கூறினார்

கொடிகாமம் திருநாவுக்
கரசு மடாலயத்தில், நேற்று
முன்தினம் நடந்த இக் கூட்
டத்தில், புலவர் சி. சின்னையா
தலைமை தாங்கினார்.

இலங்கை இராமநாதன்
கழக செயலாளர் திரு கே.
எஸ் மகேசன் இராமநாதன்
கழகக் கிளையை அங்குரார்ப்
பணம் செய்துவைத்தார்.

திரு செ. சிவப்பிரகாசம்
மேலும் கூறியதாவது: 62ம்
ஆண்டு கல்வி மந்திரியாக
விருந்த ஜனாப் பதியுதீன்முக
மத் இராமநாதன் கல்லூரி
க்கு நேரில் சென்று பார்வை
யிட்டபின் அங்குள்ள குறிப்
புப் புத்தகத்தில் இக்கல்லூரி
சர்வகலா சாலையாக வேண்
டும்' என எழுதினார். அப்
பொழுது நானும் அங்கு
சமுகமளித்திருந்தேன்.
அவர்தான் இன்று மீண்டும்
கல்வி மந்திரியாக வந்திருக்
கிறார். இராமநாதன் பல்க
லைக் கழகத்திற்கு முதன் முத
லாக அடையாள மான்யம்
ஒதுக்கிய திருமதி சிறிமா
தலைமையிலான கூட்டர
சாங்கமே இன்று பதவிக்கு
வந்துள்ளது. திரு. நடேசனை
செனட் சபையில் நியமி
த்து, இராமநாதன் பல்கலைக்
கழகம் நிறுவுவதற்கான ஆர
ம்ப நடவடிக்கை எடுத்த
பிரதமர் திருமதி சிறிமா
பண்டாரநாயக்கா கூடிய
விரைவில் வடக்கில் மட்டு
மன்று கிழக்கிலும், தெற்கி
லும் பல்கலைக் கழகங்கள்
நிறுவுவார் என்ற நம்பிக்கை
மந்திரிப்பதவி வழங்கப்பட்
டிருக்கிறது. இதன் மூலம்
தமிழ்மக்களுக்கு கிடைக்க
விருக்கும் நன்மைகளை தமிழ்
அரசியல் கட்சிகள் கெடு
த்துவிடக் கூடாது.

இலங்கை இராமநாதன்
கழகச் செயலாளர் திரு கே
எஸ். மகேசன் பேசும்போது
கழகத்தின் நோக்கங்களை
விளக்கிக்கூறினார். சேர் பி.
இராமநாதன் எந்தெந்த
லட்சியத்திற்காக வாழ்ந்
தாரோ அந்தந்த லட்சியத்
திற்காக, இக்கழகம்உழைக்க
வேண்டுமென்றும், கட்சிப்
பிரிவினைகளை மறந்து, வாலி
பர்கள் ஒன்று சேர்ந்து இப்
பகுதி முன்னேறப்பாடுபட
வேண்டுமென்றும் கூறினார்.

திரு. எஸ். எம். கமலநா
தன் பேசும்போது, தேர்தல்
முடிந்துவிட்டதால், இனி
மேலும், கட்சிப்பாகுபாடு
காட்டாது. எமது கிராமத்
தைமுன்னேற்ற வாலிபர்கள்
ஒன்றுசேர வேண்டும் என்று
கூறினார்.

## 'சாதி ஒழிப்புக்கு கட்சி தொடர்ந்து போராடும்'

— ஜெயக்கொடி எம்.பி

பருத்தித்துறை, வியா.
'எனது வெற்றிக்கு பக்க
பலமாக இருந்த சிறுபான்
மைத் தமிழ்மக்களுக்கு நான
என்றும் கடமைப்பட்டுள்
ளேன் சிறுபான்மைத்தமிழ்
மக்களுக்குச் சமூகரீதியாக
உரிமைகள் பெற்றுக்கொடுக்
கும்தமிழரசுக்கட்சியின்சீரிய
இலட்சியத்தையடைய
நானும் தீவிரபங்கெடுப்
பேன்' தமிழினத்தின்சாபக்
கேடான சாதிவேற்று
மையை வேரோடு சாய்க்
கும் பணியில் எனது கட்சி
தொடர்ந்து, போராடும்.

இவ்வாறு உடுப்பிட்டி
எம். பி. திரு. க. ஜெயக்கொடி
நேற்றுமுன்தினம்கரவெட்டி
தமிழ்-பௌத்த பாடசாலை
யில் நடந்த பொது வரவேற்
பில் கூறினார். திரு. வீ தங்க
மணி தலைமை வகித்தார்.

திருவாளர்கள் ம. பொ.
வீரவாகு, கே. இராசரத்தி
னம் ஆகியோரும் பேசினர்.

ஐக்கிய முன்னணியின்

## வெற்றிக்கு தொழிலாளர்களே காரணம்

களனி, வியாழன்
"கடந்த ஐந்து வருட
காலமாக தொழிலாளர்கள்
அனுபவித்த கஷ்டத்தின்
காரணமாக ஐக்கிய முன்
னணி பொதுத் தேர்தலில்
வெற்றியீட்டக் கூடியதாக
விருந்தது,

தகவல், ஒலிபரப்பு அமைச்
சர் திரு. ஆர் எஸ்
பெரேரா தனக்கு களனியில்
அளிக்கப்பட்ட வரவேற்புப
சாரத்தில் பேசுகையில் மேற்
கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து
பேசுகையில் கடந்த 5 வருட
ஆட்சியும் ஜனநாயக ஆட்சி
யல்ல. இதனால் பாதிக்கப்
பட்ட மக்கள் தங்கள் முடி
வைத் தேர்தலில் காட்டி
விட்டார்கள். திருமதி சிறி
மாவோ பண்டாரநாயக்கா
தலைமையிலான சோஷலிச
ஜனநாயக அரசாங்கத்துக்
குப் பிரச்னைகளைத் திருப்தி
கரமாகத் தீர்த்துவைக்க
மக்கள் தங்கள் ஒத்துழை
ப்பை அளிக்கவேண்டும்,

## சுகாதார வாரம்

கோட்டை, வெள்ளி
இன்று தொடக்கம் ஜூன்
12-ம் திகதிவரை நாடுபூரா
வும் சுகாதார வாரத்தைக்
கொண்டாடுவதற்கான நட
வடிக்கைகளை சௌக்கிய
சேவை இலாகா எடுத்துள்
துள்ளது.

இந்த வாரத்தில் சௌக்
கிய இலாகாவைச் சேர்ந்த
அதிகாரிகள் மக்களுக்கு
மலேரியா, காசநோய்
போன்ற நோய்களைத் தடுப்
பதுபற்றி எடுத்துக் கூறுவர்.
இதைவிட வைத்தியசாலை
களைத் துப்பரவு செய்தல்,
டி, டி, ரி. தெளித்தல்
போன்ற நிகழ்ச்சிகளும்
இடம்பெறும்.

சௌக்கிய சேவைகள்
அதிபர் டாக்டர் டி. பி. குண
சேகரா சௌக்கிய இலாகா
அதிகாரிகள் யாவருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதிலும் வரலா[illegible] டும் என்றும் சொன்னர்.

## கல்வி அமைச்சரை வரவேற்க ஏற்பாடு

பருத்தித்துறை, வியாழன் வடபகுதியிலுள்ள பௌத்த தமிழ்ப்பாடசாலைகளின் ஆசிரியரும், மாணவரும், பெற்ருரும் கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மகமூத்திற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு பகிரங்க வரவேற்பளிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இவ் வரவேற்பின்போது மேற்படி பாடசாலைகள் மகாவித்தியாலயத்திற்குத் தரமுயர்த்தப்படவேண்டுமென வலியுறுத்தப்படுமென்றும் தெரிகிறது.

## பல்கலைக்கழகத்தில் மக்கள் கமிட்டி அமைக்க கோரிக்கை

கண்டி, வியாழன் 'உயர்கல்விச்சட்டம்விரைவில் மாற்றி அமைக்கப்படும். பல்கலைக்கழகங்களுக்கும், மாணவர்களுக்கும் முக்கிய இடம் கொடுக்கப்படும். எல்லோருடைய பூரண ஒத்துழைப்பும் அறிவாற்றலும் எங்களுக்குத் தேவை''

இவ்வாறு கைத்தொழில் விஞ்ஞானஆராய்ச்சி மந்திரி திரு. டி. பி. சுபசிங்கா பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் மத்தியில் பேசும்போது கூறினர்.

பல்கலைக்கழக மாணவர் சங்கம் ஒழுங்குசெய்த இக் கூட்டத்திற்கு திரு. சமரநாயக்கா தலைமை வகித்தார்.

''வேலையில்லாத்திண்டாட்டம், பட்டதாரிகள் பிரச்னை பட்டதாரி மாணவர்பிரச்னை முதலியவற்றைப் படிப்படியாக இந்த மக்கள் அரசாங்கம் தீர்த்து வைக்கும்'' என அமைச்சர் சுபசிங்கா சொன்னர்.

பேராசிரியர் குண சேகரா பேசுகையில் பல்கலைக்கழக மாணவர் பிரச்னை தீர்க்கப்பட விட்டால்பல்கலைக்கழக கல்வியின் பயனை உண்மையாகப் பெற முடியாது என்ருர்.

மாணவர் சங்கத்தலைவர் திரு. சமரநாயக்கா பேசுகையில திரு சுபசிங்காபல்வேறு சந்தர்ப்பங்களில் எமதுபிரச்னையைப்பற்றி கலந்துரையாடியிருக்கிருர். 1935லிருந்து பல்கலைக்கழகத்திற்கு எந்த மந்திரியும் வந்தது கிடையாது. ஆனல் மந்திரி சபை அமைத்து சிலமணி நேரத்தில் மந்திரி சுபசிங்க இங்கு விஜயம் செய்திருப்பது இது உண்மையான மக்கள் அரசாங்கம் என்பதை உறுதிப்படுத்துகின்றது'' என்ருர்.

பல்கலைக்கழகவட்டாரத்திலிருந்து பொலிஸ் அகற்றப்பட வேண்டும் என மாணவர்கள் மந்திரிக்கு வேண்டுகோள்விடுத்தனர்,

மக்கள்கமிட்டியைமுதலில் பல்கலைக்கழகத்தில் அமைக்க வேண்டும் எனபெரும் கரகோஷத்திற்கிடையே மந்திரியிடம் மாணவர் கேட்டுக் கொண்டார்கள்.

## "பொருளாதார வளமிருந்தால் தரமான படம் தயாரிக்கலாம்"

உடுப்பிட்டி, வியாழன் ''ஈழத்தில் தரமான திரைப்படங்கள், நாடகங்கள் தயாரிக்கப்படவேண்டும் என்ற ஆசை எமது மக்களிடையே இருக்குமானல் அவர்கள் புற்றீசல் போல வெளிவரும் தரங்கெட்ட தென்னிந்தியத்திரைப் படங்களை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள். பொதுமக்களின் ஆதரவும் பொருளாதார வலுவும் இருந்தால் மிகவும் தரமான படங்களை எம்மால் தயாரிக்கமுடியும். சொந்த நாட்டுக் கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் ஆதரவளியுங்கள். எங்கள் கலை, கலாச்சாரம் என்பன தாமாகவே வளரும்.''

இவ்வாறு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்திற்கண்மையில் அமைக்கப்பட்ட இரங்கன் அரங்கில் நடைபெற்ற மூன்று நாடகங்களின் போது பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட ஈழத்துத்திரைப்பட நடிகரும் நாடக இயக்குநருமான ரகுநாதன் கூறினர்.

திரு. இரகுநாதனுக்கு நெல்லை சண்முகானந்த நாடகசபையின் சார்பில் நெல்லை க. பேரன் மலர்மாலை சூட்டிக்கௌரவித்தார். 'மரணத்தின் மடியில்' 'மயானத்தில் மன்னன்' 'வேலைக்காரன்' ஆகிய நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன.

[illegible] ஓட்டமுயன்ருல் சாரதியின் பாக்கட்டிலிருக்கும் நுண்ணிய தகவல் ஈர்ப்பு சாதனம் உடனடியாக 'அபாய அறிவிப்பைக்' கொடுத்துவிடும். உடனே சாரதி தம் வசமிருக்கும் இந்த சாதனத்திலுள்ள ஒரு மின்பொத்தானை அமுக்கிவிட வேண்டியதுதான். இதிலிருந்துபுறப்படும் மின்னணு விசையுந்தல் காரின் இயக்குபொறியை இயங்காது தடுத்துவிடும். எனவே திருடன் காரை ஓட்டிச்செல்ல முடியாது போய்விடும்.

இங்கிலாந்தில் ஜோக்ஸயர் நகரிலுள்ள 'ரொலேட் புரடக்ஸ்' எனப்படும் பிரபல மின்பொறியியல் ஸ்தாபனம் இந்த விநோதமான சாதனத்தைக கண்டுபிடித்திருக்கிறது.

கார்த் திருட்டுகளை முறியடிக்கும் இந்த நவீன சாதனம், ஸ்கொட்லன்ட்யாட் பொலிஸ் நிபுணர்கள் உட்பட பலரின் கவனத்தை ஈர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கன்ன காலமானர்

புதுடில்லி, ஜூன்4 இந்தியாவின் முன்னள் மறுவாழ்வுமந்திரி டாக்டர் மேகச்சந்த கன்ன இன்று அதிகாலை காலமானர். அவருக்கு வயது 73.

## 'பஸ்சேவையை சீராக்குக'

யாழ்ப்பாணம், வெள்ளி 'யாழ்ப்பாணம்- ஊர்காவற்றுறை 778-ம், 779-ம் இலக்க பஸ் சேவை ஒழுங்காக நடைபெறவில்லை நான் உங்களுடன் இது பற்றி நேரிலேயே பேசியிருக்கிறேன். இனியும் இப்படியான நிலைமை ஏற்படாது. தீவுப்பகுதி பஸ்கள் நல்ல முறையில் சேவையிலீடுபட ஏற்பாடு செய்யுங்கள்' என்று ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வடபகுதி பிரதேச முகாமையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பு[illegible]யிரதங்கள் மேற்படி விவசாயிகளால் மறிக்கப்பட்டுச் சூறையாடப்பட்டனவாம்.

— —

## அதிசயக் குழந்தை

மசூலிப்பட்டினம் ஜூன் 4 கடந்தமாதம் 29-ந்திகதிஇங்குள்ள ஆஸ்பத்திரியொன்றில் ஒரு பெண் இரண்டு தலைகள் உள்ள குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள்.

இறந்து பிறந்த இவ்வதிசய குழந்தையை ஆஸ்பத்திரி அதிகாரிகள் கண்ணடிப் பெட்டிக்குள் பாதுகாப்பாக வைத்திருக்கிருர்கள்.

— —

## லண்டன் பட்டம் பெற்ற டாக்டர்கள்

லண்டன், ஜூன் 4 இலங்கையைச் சேர்ந்த 7 டாக்டர்களுக்கு குழந்தை ஆரோக்கியம் பற்றிய துறையில் லண்டன் அரசகல்லூரி, இங்கிலாந்து அரச கல்லூரி ஆகியன டிப்ளோமா பட்டம் அளித்துள்ளன

டாக்டர் அருளானந்தம், டாக்டர் லட்சுமன் ஜெயகுரு, டாக்டர் மகிண்டா டி. ஜெயசிங்க, டாக்டர் (செல்வி) சுயாதி மெனல்லீன, டாக்டர் வி. ஏ. மாடப்பிள்ளை, டாக்டர் எஸ். கே. நல்லைநாதன், டாக்டர் ஜே. எம். செனிவீரத்தின பண்டா ஆகியோரே மேற்படி ஏழு பேருமாவர்.

— —

## நயினை தொண்டர் சபை

யாழ்ப்பாணம், வெள்ளி இன்று ஆரம்பமாகும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவத்தில் வழமையாகத் தொண்டாற்றும் தொண்டர் சபையினர் கடமையாற்றச் சகல ஒழுங்குகளையும் செய்துள்ளனர்.

மேற்படி ஆலய உற்சவங்களுக்கு வரும் யாத்திரீகர்கள் இத்தொண்டர் சபையாரின் வேண்டுகோளுக்கு இணங்க நடப்பதோடு குறிப்பாகப் பிரயாணம் செய்யும் படகுகளில் அளவுக்குமீறி ஏறிச் செல்லாமலும், போக்குவரவு ஒழுங்கிற்கு அமையநடந்து அவற்றைக் கவனிக்கும் தொண்டர் சபைக்கு ஒத்துழைப்புஅளிக்குமாறும் தொண்டர் சபை தலைவர் திரு. நா. விசுவலிங்கம் கேட்டுள்ளார்.

மேலும் அவர் யாத்திரீகர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் இச்சபை கவனிக்குமெனவும் தெரிவித்துள்ளார்.

[illegible] டர் சபைத் தலைவரா[illegible]நிய மிக்கப்பட்டுள்ளார்.

திரு. எம். எஸ். அலிவ் மந்திரிசபைக் காரியதரிசியாகநியமிக்கப்பட்டுள்ளார்.

— —

## ஆங்கிலம் உலக மொழி

யாழ்ப்பாணம், வெள்ளி ''ஆங்கிலம் உலகமொழி. அறிவுலகில் ஆங்கிலம் முதலிடம் பெறுகின்றது. ஆங்கிலமூலம்தான் உலகநாடுகளிடையே பழகவும், பரஸ்பரம் எண்ணத்தைப் பகிர்ந்துகொள்ளவும் முடியும். எனவே நல்ல ஆங்கிலப் பயிற்சி பெறுவதற்குக் கேட்பதும், பேசுவதும், வாசிப்பதும், எழுதுவதும் முக்கியமாகின்றது. இவ் வழிவகைகளால் ஆங்கில அறிவை உயர்த்துவதுதான் இவ்விழாக்களின் நோக்கமாகும்'' என்று வல்வை சிதம்பராக் கல்லூரியில் நடைபெற்ற ஆங்கில தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆங்கிலக் கல்வி அதிகாரி திரு. வீரசிங்கம் பேசுகையில் கூறினர். அதிபர் திரு. இ. சச்சிதானந்தமும் உரையாற்றினர். விழாவையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்வர்களுக்கு திரு. வீரசிங்கம் பரிசுகள் வழங்கினர்.

பரிசு பெற்ருேர் விபரம்:

ஆங்கிலப்பாடல்: ஆண்கள் - அ அருள்பகவான், சோ. சிவனருள்சுந்தரம். பெண்கள் - எம். எல். ஞானேஸ்வரி, ந. பவானி. ஆங்கிலக் கட்டுரை ஆண்கள் - சோ. சிவனருள் சுந்தரம், வி. கிருஷ்ணமூர்த்தி. பெண்கள் - இ. இரத்தினேஸ்வரி, ரி. மகேஸ்வரி. சொற்கூட்டு: ஆண்கள்- சோ, சிவனருள் சுந்தரம், வி. கிருஷ்ணமூர்த்தி. பெண்கள்: ரி. தங்கராணி, எம். எல். ஞானேஸ்வரி. வாசிப்பு: ஆண்கள் ரி. சந்திரகுமார், ஆர். பஞ்சலிங்கம். பெண்கள் - எம் எல். ஞானேஸ்வரி, ஆர். இரத்தினேஸ்வரி

— —

## கோழிநோய்

யாழ்ப்பாணம். வெள்ளி கனகபுரம், விசுவமடு போன்ற படித்த வாலிபர்களின் கோழிப்பண்ணைகளில் கொடிய தொற்றுநோய் பரவியுள்ளதாம். இதில் ஏராளமான கோழிகள் இறந்து விட்டன.

போதிய கோழிமுட்டைகளை யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் அனுப்பி வந்த இவர்கள் தற்போது மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். (குவிம)

[illegible] பண்டாரநாயக்கா கூடிய விரைவில் வடக்கில் மட்டுமன்று கிழக்கிலும், தெற்கிலும் பல்கலைக் கழகங்கள் நிறுவுவார் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கல்வி மந்திரி ஜனப் பதியுதின் தமிழ்மக்கள் மீது அன்புகொண்டவர் நியாயமான எந்தக் கோரிக்கையையும் தட்டிக் கழிக்கமாட்டார். கூட்டரசாங்க மந்திரி சபையில் இரு முஸ்லிம்களுக்கு மந்திரிப்பதவி கிடைக்க விருந்தது. தமிழர் ஒருவருக்கு மந்திரிபதவி வழங்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் காரணமா ஜனப்பதியுத்தின், தமிழருக்கு ஒரு பதவியை விட்டுக் கொடுத்தார் அதுமட்டுமல் சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதியான திரு. எம். சி. சுப்பிரமணியத்திற்கு நியமன அங்கத்தவர் பதவி வழங்கவேண்டும் என்று வற்புறுத்தியவர்களில் ஜனப் பதியுதினும் ஒருவராவர். செப்டம்பர் மாதம் காலியாகப்போகும் செனட்சபை இடங்களிலும் வடபகுதியைச் சேர்ந்த இடது சாரித் தலைவர் ஒருவருக்கு இடம் கிடைக்கப் போகின்றது. கூட்டரசாங்கம்சிறுபான்மை இனத்தவர்களுக்கு என்ன நன்மைகள் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்யப்பின்நிற்காது.''

திரு. எஸ். எஸ். சரவணமுத்து பேசும் போது கூறியதாவது. ''தமிழ் மக்கள் இன்று பெரும் ஆபத்தான நிலைமையில் இருக்கிருர்கள் ஆட்சிமன்றத்தில் கூட்டரசாங்கம், மிகப்பெரும் பான்மை பலம்பெற்றிருக்கிறது. இந்த நிலையில் தமிழ் அரசியல்கட்சிகளாள் தமிழரசு தமிழ்காங்கிரஸ் ஆகியவை அரசாங்கத்தை எதிர்ப்பதால் எவ்வித பயனையும் பெற்றுவிடமுடியாது சிறுபான்மைப்பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் கூட்டரசாங்கத்திற்கு தமிழ் மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சிங்கள மக்களையோ, அரசாங்கத்தையோ எதிர்த்துக்கொண்டு தமிழ் மக்கள் எந்த உரிமையையும் பெற்றுவிட முடியாது. தமிழ் அரசியல் கட்சிகள் அரசாங்கத்தை எதிர்ப்பதால், தமிழ்-சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நல்லெண்ணம் பாதிக்கப்படும். தமிழ் அரசியல் கட்சிகள் இடதுசாரிகளுக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் தமிழ்மக்களுக்கு அவர்கள் என்ன நன்மைகள் செய்கின்ருர்கள் என்று பொறுத்திருந்து பார்க்கவேண்டும். முதல் தடவையாக கூட்டரசாங்கத்தில் தமிழர் ஒருவருக்கு

ஜனநாயக அரசாங்கத்துக்குப் பிரச்னைகளைத் திருப்திகரமாகத் தீர்த்துவைக்க மக்கள் தங்கள் ஒத்துழைப்பை அளிக்கவேண்டும், பொதுத் தேர்தலின்போது மக்கள் பலபிரிவுகளாகப் பிரிந்து முதலாளித்துவத்தை நாட்டிலிருந்து ஒழிக்கப்பாடுபட்டார்கள். தம்முயற்கியில் வெற்றிகண்ட மக்கள் தங்கள் மத்தியிலுள்ள வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாகப் புதிய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கவேண்டும் எனக் கூறினர்.

— —

## சுங்கப்பகுதி உத்தியோகஸ்தர் சத்தியாக்கிரகம்

கொழும்பு, வியா. சுங்கப்பகுதி நிர்வாக உத்தியோகஸ்த்தர் சங்கத்தைச் சேர்ந்த 25 பேர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

பிரதான சுங்கச் சேகரிப்பாளரின் தனிப்பட்ட அலுவலகத்திற்கு முன் சத்தியாக்கிரகமிருக்கும் இவர்கள் சுங்கப்பகுதித் தலைவரான திரு. வி. பி. வித்தாச்சியை அவருடைய பதவியிலிருந்து உடனடியாக அகற்ற வேண்டும் எனக் கோருகின்றனர்.

கடந்தசில தினங்களுக்கு முன் நடைபெற்ற மாற்று உத்தியோகஸ்தர் தகுதிகாண் பரீட்சையையும் இவர்கள் எதிர்க்கிருர்கள். மேற்படி பரீட்சையை நிராகரித்தாலும் புதிய அரசாங்கத்திற்கு தாம் எதிர்ப்பல்ல என தொழிற்சங்கப் பிரமுகர் திரு. கே. விக்னேஸ்வரராசா கூறினர். அவர் மேலும் கூறுகையில் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன பிரச்னையைத் தீர்த்து வைத்தது போல இப்பிச்ரனையையும் புதிய அரசாங்கம் தீர்த்து வைக்கும் என நம்பிக்கை தெரித்தார்.

— —

## ஆலயப் பிரவேச முயற்சி

சுழிபுரம், வியாழன் வட்டுக்கோட்டை கிராம சபை எல்லைக்குட்பட்ட சகல கோவில்களிலும் ஆலயப் பிரவேசம் செய்ய அப்பகுதியிலுள்ள ஹரிஜன மக்கள் நடவடிக்கை எடுக்க ஓர் உப சபையைத் தெரிவு செய்துள்ளனர். உயர்சாதி மக்களுடனும், ஆலய நிர்வாக சபையினருடனும் பேச்சு வார்த்தை நடாத்தி நடவடிக்கை எடுப்பதாகவும், பேச்சு வார்த்தைகளால் பலன் ஏற்படாது விட்டால் நேரடி நடவடிக்கை பற்றி ஆலோசிக்கப்படுமென்றும் உபசபையைச் சேர்ந்த ஒருவர் தெரித்தார்.

சௌக்கிய சேவைகள் அதிபர் டாக்டர் டி. பி. குணசேகரா சௌக்கிய இலாகா அதிகாரிகள் யாவருக்கும் முக்கிய சுகாதார பிரச்னைகளுக்குத் தீர்வு காணுவதற்குத் திட்டங்களை உருவாக்குமாறும் உத்தர விட்டுள்ளார்.

— —

## பிரதமருக்கு பாராட்டுப் பிரேரணை

யாழ்ப்பாணம், வெள்ளி சிறுபான்மைத் தமிழரின் சார்பாக திரு எம். ஸி, சுப்பிரமணியத்தை நியமன அங்கத்தவராக்கிய பிரதமர் ஸ்ரீமாவோபண்டாரநாயகாவைப் பாராட்டும் பிரேரணையொன்றை திரு. என். ரி செல்லத்துரை எம். எம். சி. யாழ்ப்பாண மாநகர சபைக்கு கொண்டுவரவிருக்கிருர்.

இதைத் தொடர்ந்து மாநகரசபை பொதுவரவேற்பொன்றையும், திரு. எம். சி. சுப்பிரமணியத்துக்கு வழங்கவும் ஏற்பாடு செய்யப்படுமெனவும் நம்பப்படுகிறது.

— —

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம் வியாழன் பண்ணுகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபையின் பத்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. செ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: சி. ஆறுமுகசாமி, உபதலைவர்: வ. இராமலிங்கம், காரியதரிசி: இ. குமாரசாமி, உபகாரியதரிசி: இ. அப்பாத்துரை, தனாதிகாரி: செ. திருநாவுக்கரசு, நிர்வாகஸ்தர்: இ. குமாரசாமி, உதவி நிர்வாகஸ்தர்: வெ பரமு, கணக்குப் பரிசோதகர்கள்: வ ஆறுமுகம், வி. மகாலிங்கம், மலேசியா நாட்டின் பிரதிநிதி: பொ. இராமநாதன்.

0 0 0

சுழிரபும், வியாழன் மாதகல் மேற்கு சன சமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. வ சதாசிவம் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்தலைவர்: வ சதாசிவம், உபதலைவர்: தா. கந்தையா, காரியதரிசி: கதிர் செல்வநாயகம். உபகாரியதரிசி: வீ. சிவஞானசுந்தரம், தனாதிகாரி: அ. கந்தசாமி, நூல் நிலையப் பொறுப்பாளர்: நா. சண்முகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

போராட்டத்தில், முயற்சியில் படுகிற துன்பத்தில் தான் இன்பம் இருக்கிறது; வெற்றியில் மட்டும் அல்ல. — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 22-ந் திகதி (5-6-70)


## எதிர்க்கட்சித் தலைவர்

சென்ற ஐந்து வருடங்களாக இலங்கையின் பிரதமராக இருந்து நற்தொண்டாற்றிய திரு. டட்லி சேனநாயகா இப் பொதுத்தேர்தலுக்குப் பின் எதிர்க்கட்சித் தலைவராகியுள்ளார். தேர்தல் முடிவுகள் அவருக்கும் அவரது கட்சியினருக்கும் பெரும் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அளித்திருக்கவேண்டும். என்றாலும் தேர்தல் மூலம் மக்கள் அளித்த தீர்ப்பை அவர் கண்ணியமாக ஏற்றுக்கொண்டு, மக்களின் அமோகமான ஆதரவைப் பெற்ற கூட்டுமுன்னணி அரசாங்கத்துக்கு நல்வாழ்த்துக் கூறியிருப்பது அவரது ஜனநாயகப் பண்பைக் காட்டுகின்றது.

பொதுத்தேர்தலை அமைதியாக நடத்தி, மக்கள் அளித்த தீர்ப்பை தெய்வத் தீர்ப்பென்று ஏற்று, எதிர்க்கட்சி தலைவர் என்ற தமது புதிய பொறுப்பை நிறைவேற்ற திரு. டட்லிசேனநாயகா முன்வந்திருப்பது இலங்கையிலே ஜனநாயகம் எவ்வளவு வேரூன்றியுள்ளதென்பதையும், இலங்கைப் பொதுமக்கள் அரசியலில் எவ்வளவு அனுபவமும் முதிர்ச்சியும் பெற்றுள்ளனரென்பதையும் காட்டுவதாக இருக்கின்றது. பொதுத் தேர்தலுக்குப் பின் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி, சர்வாதிகாரம் ஏற்படுமென்று பயமுறுத்தப்பட்டது. அவையெல்லாம் பொய்யாகி வாக்குப்பெட்டி மூலம் பெரிய அரசியல் புரட்சி ஏற்படச்செய்து, தமது பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்து ஆட்சிப்பொறுப்பையும் ஒப்புவித்துவிட்ட திரு. டட்லி சேனநாயகாவின் ஜனநாயகப் பண்பு போற்றத்தக்கதாகும்.

ஜனநாயக அரசியல் அமைப்பிலே பார்லிமெண்ட் எதிர்க்கட்சியின் தலைவர் பதவியின் பொறுப்பு கொஞ்சமல்ல. ஆட்சியாளரின் குறைகுற்றங்களையும், மக்களின் சங்கடங்களையும் சபையில் எடுத்துக்கூறி, அவற்றைத் தீர்க்கவும், அவ்விதம் மீண்டும் நடக்காமல் கண்காணிக்கவும் வேண்டும். இன்றேல் எதேட்சாதிகாரம் தலைதூக்கி மக்களின் சங்கடங்கள் அதிகரித்து ஜனநாயகமே தோற்றுவிடக்கூடும். பிரதமர் பதவி மட்டுமன்றி, எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்து அனுபவம்பெற்ற திரு டட்லி சேனநாயகா எதிர்க்கட்சித் தலைவராகியுள்ளதால், ஆட்சியாளர் உற்சாகமிகுதியில் அதிக தவறுகள் செய்யாமல் அவர் பார்த்துக்கொள்வாரென்றே நம்புவோம்.

எதிர்க்கட்சியின் பலம் புதிய பார்லிமெண்ட் சபையில் மிகவும் குறைவுதான் என்றாலும் சுயநலமின்றி ஆட்சியைப் பல்லாண்டுகாலம் திறமையாக நடத்தியவரான திரு, டட்லிசேனநாயகாவும் அவரதுசகாவும்நல்ல அனுபமும்பொறுப்பும்வாய்ந்த வருமான திரு. ஜே, ஆர். ஜெயவர்த்தனவும் எதிர்க்கட்சியிலிருப்பதால். அவர்களது பேச்சுக்கு ஆட்சியாளரிடையே போதிய மதிப்பும் செல்வாக்கும் இருக்குமென்றும், இலங்கையில் ஜனநாயகம் வளர்ந்தோங்கி மக்களின் குறைதீர்ந்து நல்வாழ்வு வாழ்வரென்றும் நம்புவோம்.

## உலகத் தலைவர்களின் வாழ்த்துக்கள்

இலங்கையின் புதிய பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு உலகத் தலைவர்கள் அனைவரிடமிருந்தும் பாராட்டுகளும் வாழ்த்துக்களும் குவிந்தவண்ண முள்ளன. இவை வெறும் சம்பிரதாயச் செய்திகளென்று சிலர் ஒதுக்கி அலட்சியப் ... நமக்குத் தேவையான உதவிகள் பெறுவதுடன் உலக சமாதானத்தைப் பாதுகாக்கக்கூடிய செல்வாக்கும் இலங்கைக்கு இருக்கலாம். ஏற்கனவே சீன - இந்திய எல்லையில் போரை நிறுத்திய பெரிய பணியை முன்னர் ஸ்ரீமா

# கவிகாளிதாசன் பூசித்த மணித்தீவு நாயகி

## நயினை அம்பாள் உற்சவம் இன்று ஆரம்பம்

(நயினை செம்மணத்தம்புலம் எம். நவம்)

நயினாதீவுக்கு நற்றாப் புகழை அளிப்பது இங்குள்ள அருட்பிரகாசமான அம்பிகையின் ஆலயமாகும். இதை நாகம்மாள் நாகபூஷணி அம்பாள் நாகேஸ்வரி அம்பாள் கோவில் என மக்கள் பக்தியால் பல விதமாக அழைப்பர்.

### மகாகவி காளிதாசன் கூற்று

சமுத்திர மத்தியிலே தளிர் போன்று விளங்கும் மணித்தீவிலே அறுபத்து நான்கு சகதி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று, வற்றாக் கருணை மழை பொழிந்த வண்ணமிருக்கின்றாள் புவனேஸ்வரியம்மை என கவி காளிதாஸ் கூறிஇருக்கின்றார் அவரும் தேவியை வழிபட்டு மங்காப் புகழை அடைந்தார் என்பது இதிலிருந்து அறியக்கிடக்கின்றது.

### கோவிலமைந்த வரலாறு

'முன்னொரு காலத்தில் நயினையிலுள்ள அம்பிகையை நாகம் ஒன்று பக்தி சிரத்தையுடன் பூசித்துவந்தது. ஒருநாள் அந்நாகம் அர்ச்சனை செய்வதற்காகப் பூக்கள் கொய்வதற்குச் செல்லும் வழியில் ஒரு கருடன் அதைக் கொல்லும் பொருட்டு எதிர்த்துவந்தது கருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்திலேயுள்ள கல்லொன்றின் மீது சுற்றிக்கொண்டிருந்தது. கருடனும் அந்நாகத்தைக் கொல்லவேண்டுமென்ற அவாவினால் அதற்கெதிரேயுள்ள கல்லொன்றின் மீது இருந்து கொண்டது. இவ்வாறு இவை இரண்டும் பகைமை கொண்டிருக்கும் சமயத்திலே அக்கடல் வழியாக மரக்கலத்தில் சென்ற மாவணிகன் ஒருவன் அந்நாகத்தின் பயத்தை தம் குறிப்பாலுணர்ந்து மரக்கலத்தை நிறுத்தி, அக்கருடனை விலகும்படி கேட்டு நின்றான். உனது செல்வம் யாவும் கொணர்ந்து என் முன் வைத்தால் விலகுவேன் என்று ஓர் அசரீரி வாக்குக் கேட்டது. வணிகனும் அப்படியே செய்தான். நாகபொழுது நாகரத்தினக்கற்கள் அவ்வறையுள் இருப்பதைக் கண்ணுற்றனர். இது நாகபூஷணி அம்பாளின் திருவருள் என்று எண்ணி களிப்புற்றவராய் நயினாதீவுக்குயாத்திரைசெய்தனர் நயினாதீவுக்குச் சென்று நாகம்மாளுக்குச் சிறந்ததோர் ஆலயம் கட்டுவித்தனர். இவ்ஆலயம் ஏழு வீதிகளையும் கூடகோபுரங்களையும் கொண்டுவிளங்கிற்று'' என்பது கர்ணபரம்பரைக் கதை, பாம்புசுற்றிக்கல் என்றும், 'கருடன் கல்' என்றும் இப்போதும் உள்ளது. இதைப் பல்லாயிரம் மக்கள் சென்று பார்வையிடுவது விழாக்காலங்களில் வழக்கம். கோவிலமைப்போடு செம்புத்தேர், பவளத்தேர், முத்துத்தேர் என மூவகை தேர்கள் அம்பாளுக்கு செய்துவைத்ததாகவும் கதை கூறுகிறது.

### மணிமேகலா சம்பந்தமும் நயினையும்

மணிமேகலா தெய்வம் இத்தீவுகளைப் பாதுகாத்து வந்தது என்று ஐதீகங்கள் உண்டு. மணிமேகலா தெய்வமானது அரக்கர் வாதைபண்ணுதபடி இந்திரனுடைய ஆணையால் பல தீவுகளைப் பாதுகாத்துக் கொண்டிருந்தது. மணிமேகலை மணிபல்லவத்தைத் தரிசித்து சித்திகள் பெற்றதாக மணிமேகலை என்னும் காப்பியம் கூறுகின்றது. மணிபல்லவம் காவிரிப்பூம் பட்டினத்திற்குத் தெற்கே 30 யோசனை அளவிலுள்ள ஒருசிறு தீவாகும் என்பது மணிமோகலை புராணத்தில் கூறப்பட்டுள்ளது. மணிமேகலை மணிபல்லவத்தில் தங்கி அமுதசுரபி' என்ற அக்ஷயபாத்திரத்தைப் பெற்றாள் என நூல் கூறுகின்றது' 'மகாவம்சம்' என்ற நூலிலும் இவ்வரலாறு அழகாகக் கூறப்பட்டுள்ளது. இத்துடன் கடல் ஓட்டுக்கதை, வெடியரசன் நாடகம் வையா பாடல் முதலானவற்றை நோக்குமிடத்து நயினையம்பதி யாத்திரை ஸ்தலமாகவும் சிறந்ததுறைமுகமாகவும் விளங்கியுள்

### அந்நியர் படை எடுப்பு

பழம்பெருமை வாய்ந்த அம்பாளது ஆலயம், பொருள் நிறைந்து விளங்கியதால் இதனைக்கண்டு மனம் பொறுத அந்நிய நயவஞ்சகர்களான போர்த்துக்கீசர், பொருள்பண்டம் அனைத்தையும் அபகரிக்கும் பேராசை பிடித்தவர்களாகஇதனை அழிக்க தொடங்கினர். இங்குள்ள செம்பு, பவளம், முத்து, ஆகிய மூன்று தேர்களும் கொடியவர்களது கொடுமை தாங்காது தாமாகவே கடலுள் போய் ஆழ்ந்துவிட்டன. திருவிழாகாலங்களிலும், பௌணர்மிபோன்ற தினங்களிலும் மெஞ்ஞானிகளது கண்ணுக்கு இவை தோற்றுவதாக கூறப்படுகின்றன.

அந்நியர் படை எடுப்பின் பின் சிறந்தமுறையில் இராமலிங்கர் இராமச்சந்திரராலும் அவருடன் பிறராலும் கோவில் கட்டிமுடிக்கப்பட்டது. திருக்கோவிலின் கீர்த்தியை செப்புவதுபோல் வானுற ஓங்கிநிற்கும் கோபுரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இ. மணியம் என்பாரும், பின்னர் வேலணையூரைச் சோர்ந்த சோ. மணியம் என்பாரும் அயராதுழைத்து பிற்காலத்தில் 1935-ம் ஆண்டளவில் கட்டிமுடிக்கபெற்றதாக அறியகிடக்கின்றது

### மூலஸ்தான மூர்த்தி அமைப்பு

மூலஸ்தான விக்கிரக அமைப்பை பற்றி அண்மையில் (1951-ல்) நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தின் போது அம்பிகையைத் தரிசிக்க தென் இந்தியாவிலிருந்து வருகை தந்த தென் இந்திய சிற்பசாஸ்திர ஆராய்ச்சி நிபுணராகிய உயர்திரு எம். நரசிம்மன், பழைய சரித்திரங்களிலே பேசப்பட்ட சர்ப்பவழிபாட்டிற்கு ஆதாரமாக இலங்கையிலும் இந்தியாவிலும் இன்றும் பிரத்தியட்சமாக காட்சி அளிப்பதுஇம்மூர்த்தி என்றும், இது சர்ப்பவழிபாட்டுக்காலம் 14 ஆயிரம் ஆண்டுகளுக்கு குற்பட்டதென்றும், போல் திறமையாகபோக்குவரத்து, பாதுகாப்புவசதிகளும் 'அமுத சுரபி' யின் அன்னதானமும் சிறப்பாக நடைபெறவுள்ளது. அருள் நிறை பக்தர்கள் அணி அணியாய்ச் சென்று தாம் வேண்டிய வரங்களை வேண்டியவாறுபெற்று உய்வார்களாகுக.

— —

## மாங்குளத்தில் கிளை திறக்கப்படும்

முசலி, வியாழன்

இயந்திரவியல், நீர்ப்பாசன இலாக்காக் கிளையொன்று விரைவில் மாங்குளத்தில்திறக்கப்பட விருப்பதாகத் தெரிகிறது.

இவ்வளவு காலமும் வடபகுதியில் இப்படியான ஒரு இயந்திரவியல் நீர்ப்பாசனக் கிளை இல்லாத காரணத்தால், வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஒட்டிசுட்டான், வவுனிக்குளம் ஆகிய நீர்ப்பாசன இலாகா உப பிரிவுகளையும், வவுனியா பெரும்பாக நீர்ப்பாசன இலாகாவையும் சேர்ந்த ஜீப்புகள், லொறிகள், புள்டோசர்கள் மற்றும் ஏனைய நீர்ப்பாசன இலாகாவுக்குச் சேர்ந்த வாகனங்கள் கொழும்பு ரத்மலானையில் உள்ள நீர்ப்பாசன இயந்திரவியல் தொழிற்சாலைக்கே அனுப்பித் திருத்தப்பட்டன.

மாங்குளத்தில் இப்படியான ஒரு நீர்ப்பாசன இயந்திரவியல் பகுதி திறக்கப்பட்டால் வடபகுதியில் உள்ள நீர்ப்பாசன இலாகா உப பிரிவுகளில் சம்பந்தப்பட்ட வேலைகளில் ஏற்பட்டுவரும் தாமதங்கள் நீங்கும்.

— —

பிரதமரை

## கத்தோலிக்க மதத்தினர் சந்தித்தனர்

கோட்டை, வியாழன்

கடந்த செவ்வாய்க் கிழமையன்று பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவை அவரது இல்லத்தில் கத்தோலிக்க தலைமைப்பீடம் சந்தி

## விபரங்களை உடனே பதிவு செய்ய வேண்டும்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம்ஐககியலாபநிதி பற்றுவரவுடையோர் சங்கம் மேற்கொண்டு நடவடிககைகளை எடுப்பது சம்பந்தமாக இம்மாதம் 3-ம் திகதி கூடியது, யாழ்ப்பாணம் ஐககிய லாபநிதியில் இத்தொடர்பில் இன்னும் பல பற்றுவரவுடையோர் தமது விபரங்களை இதுநாள் வரை பதிந்து கொள்ளாதவர்கள்பற்றி சபைகருத் தெரிவிககப்பட்டது, இதுவரையில் சுத்தமது விபரங்களைப்பற்றி பதியாதவர்கள் மேலும் காலதாமதம் செய்யாது மேற்படி காரியாலயத்தில் வந்து பதிந்துகொள்ளவேண்டும் என்று கோரும் தீர்மானம் பற்றுவரவுடையோர் சங்க நிர்வாகசபைக கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது (குவிம)

— —

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

முசலி, வியாழன்

மன்னார்க் காரியாதிகாரி பிரிவில்''செற் அப்'' முறையிலானதும்,''ஒவதுர் கேம்'' முறையிலானதுமான கரப்பந்தாட்டச்சுற்றுப்போட்டி தற்பொழுது நடைபெற்றுக் கொண்டு வருகின்றது இந்தச்சுற்றுப்போட்டியில் ஏறக்குறைய இருபது கழகங்களுக்கு மேல் பங்கு கொள்கின்றன.

இப்போட்டியை வெற்றிகரமானமுறையில் நடாத்த மன்னார்காரியாதிகாரி திரு. கே. தயாபரனும் மன்னார்க் காரியாதிகாரி பிரிவு விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. எம். ஜீவரத்தினமும் முயற்சி எடுத்துவருகின்றனர். இப்போட்டிகள்யாவும் இம்மாத இறுதியில் முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

— —

## உதைபந்தாட்ட முடிவுகள்

மெக்ஸிக்கோ ஜூன், 4

தற்போது மெக்ஸிக்கோவில் நடைபெற்று வரும் உலக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், கடந்த 2-ம் திகதி நடைபெற்ற, மூன்று' போட்டிகளின் முடிவுகளும் வருமாறு:-

உருகுவேக்கும் - இஸ்ரேக்லுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் உருகுவே 2-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இங்கிலாந்துக்கும் - றுமேனியாவுக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில்

## நுணுவிலில் கடைதீக்கிரை

மட்டுவில், வியா

தேர்தல் புயல் ஓய்ந்துவிட்டபோதிலும் அதன் தாக்கம் இன்னும் இருந்துவருவதற்கு அறிகுறியாக இப்பகுதியில் சிறுசிறு அசம்பாவிதங்கள் நடைபெற்றுள்ளன.

நுணுவில் சந்திக்குஅருகாமையில் கடையொன்று தீக்கிரையானது. இவற்றிக்கும் நடந்துமுடிந்த தேர்தலுக்கும் சம்பந்தமுண்டென்று பேசிக் கொள்ளப்படுகிறது. இவைசம்பந்தமாகப் பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

— —

ஆசிரியர் சங்க

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழ் ஆசிரியர் சங்க யாழ். கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் இம்மாதம் 12ம் தேதி நடைபெற விருக்கிறது.

திரு அ சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் பிரதம கல்விஅதிகாரி திருமதி ஆர். எஸ். பாமர். நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு மு. குணரத்தினம், திருவாளர்கள் க. சுப்பிரமணியம், மு. மகாலிங்கம், த. சண்முகதாசன், த பாலசுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரைவழங்குவார்கள்.

—

ல. ச. ச. க.

## வாலிப முன்னணி தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா

லங்கா சமஜமாஜக் கட்சியின் வாலிபமுன்னணிக்கிளை இணுவிலிலுள்ள அதன் பணிமலையில் திரு. த முருகையன் தலைமையில் கூட்டரசாங்கத்திற்குத் தயது பூரண ஆதரவையும் வாழ்த்தையும் தெரிவித்துத் தீர்மானமும் நிறைவேற்றியது.

திரு. வீ. காராள இவ்கத்துடன் தொடர்பு கொண்டு இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையை மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தநடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தீர்மானமும்நிறைவேறப் ட்பட்டது.

— —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தலைவர்கள் அவ வரிடமிருந்தும் பாராட்டு களும் வாழ்த்துக்களும் குவிந்தவண்ண முள்ளன. இவை வெறும் சம்பிர தாயச் செய்திகளென்று சிலர் ஒதுக்கி அலட்சியப் படுத்தக்கூடும். ஆனால் புதுச்சீனம், அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் உள் ளிட்ட எல்லா நாடுகளிட மிருந்து வாழ்த்துக்கள் கிடைத்திருப்பதைப் பார் க்கையில், இலங்கை எல் லாருக்கும் நட்பு நாடென் றும், நமக்கு அரசியல் விரோதிகளே இல்லை யென்றும் கொள்வது அதிக தவருகாது.

இவ்வித நிலைபற்றி இல ங்கை பெருமைகொள்ள நியாயமுண்டு. இதே சம யம், நம்மீது பல நாடு களுக்கும் நல்லெண்ண மும் அபிமானமும் உண் மையில் இருப்பதாயின். உலக சமாதானத்தைப் பாதுகாக்கக்கூடிய செல் வாக்கும் இலங்கைக்கு இருக்கலாம். ஏற்கனவே சீனா - இந்திய எல்லையில் போரை நிறுத்திய பெரிய பணியை முன்னர் ஸ்ரீமா செய்ய முடிந்ததுபோல், இனியும் அவ்விரு நாடு களுக்கும் சமாதானம் ஏற்படவும், ஆசியாவில் அமைதி நிலவவும் அவர் நல்ல முயற்சிகளைச் செய் யக்கூடும். நம் இலங்கை ஆசியாவின் ஸ்விட்ஸர் லந்தாக இருக்கவேண்டு மென்பது காலஞ்சென்ற பெரிய பண்டாரநாயக்கா வின் பெரிய ஆவல். அது அவரது மனைவியாரின் புதிய ஆட்சிக்காலத்தில் நிறைவேறுமென்று நம்ப, உலகத் தலைவர்களிடமிரு ந்து குவிந்துள்ள வாழ்த் துக்கள் நல்ல அறிகுறி யென்றே நம்புவோம்.

## இ. சேவர்களுக்கு வசதிகள் அதிகரிக்கப்படும்

கொழும்பு, வியாழன்

கிராமசேவகர்களைச் சேர்த்துக்கொள்வதிலும் அவர் கள் சேவையிலும் பலமாற் றங்களைச் செய்வதற்கு உள் நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநா யகா தீர்மானித்திருக்கிருர். படித்தவர்களிடையில் போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்து கிராமசேவ கராக அமர்த்துவது இம் மாற்றங்களில் மிகவும் பிர தானமான ஒன்று எனத் தெரியவருகிறது.

அவர்கள் சம்பள விகிதம், அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய வசதிகள், பொறு ப்புக்கள் ஆகியவையும் உயர்த்தப்படுமெனத் தெரி கிறது.

## உணவுப் பொருள்கள் பதுக்கல்

நாவலப்பிட்டி, வியாழன்

பொதுத்தேர்தல் முடிவு களைக் கேள்வியுற்றவுடன் இங்குள்ள வியாபாரிகளிற் பலர் பிரதான உணவுப் பொருள்கள் பலவற்றைப் பதுக்கிவைப்பதில் ஈடுபட் டுள்ளனராம்.

இதனுல் சீனி, வெங்காயம் மா, தீப்பெட்டி உட்பட சில உணவுப் பொருள் கள் இப்பகுதியில் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## வீதிகளில் அணிவகுக்க மாட்டார்கள்

கோட்டை, வியாழன்

பாடசாலைப் பிள்ளைகள் பொதுக் கொண்டாட்டங் களில் பங்குபற்றவோ அல் லது அரசியல் தலைவர்களை மற்றும் பெரியோர்களை வர வேற்க வீதிகளில் அணி வகுத்து நிற்கவோ அனு மதிக்கக்கூடாது எனக் கல்வி யமைச்சர் ஜனுப் பதியுதீன் முகமத் தனது கல்வி மா அதிபர் திரு. டி. ஜி. ஜெயரத்னவுக்கு நேற்று முன்தினம் தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் இதுபற்றித் தெரிவித்துள்ளதாவது- சுடும் வெயிலில் பாட சாலை மாணவர்கள் தலைவர் களை வரவேற்க வீதிகளில் மணிக்கணக்காக நிறுத்தி வைக்கப்படுகின்றமையைப் பல தடவைகள் நான் கவ னித்துள்ளேன். மாணவர் கள் பாடசாலை நிகழ்ச்சி களில் மட்டுமே பங்குபற்ற வேண்டும்.

## இளைஞன் மரணம்

எழுதுமட்டுவாள், வியாழன்

எழுதுமட்டுவாளைச் சேர் ந்த சிவிவாசம் குணபால சிங்கம் என்ற 22 வயது இளைஞர் அரவம் தீண்டிய தால் மரணமானார். இவ ரைக் காப்பாற்ற மேற் கொள்ளப்பட்ட எல்லாவித சிகிச்சைகளும் பயனற்றுப் போயின.

டனே விலகும்படி கேட்டு நின்றான். உனது செல்வம் யாவும் கொணர்ந்து என் முன் வைத்தால் விலகுவேன் என்று ஓர் அசரீரி வாக்குக் கேட்டது. வணிகனும் அப் படியே செய்தான். நாக மும் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாடாகிய இந்தியா விற்குச் சென்றான். நடந் தவற்றை எல்லாம் தன் மனை விக்குக் கூறினான். அன்றிரவு வணிகனும் மனைவியும் துயி லுறங்கும் போது. ஒரு பேரொளி தோன்றி அவர்க ளுடைய கண்களைச் சிறிது நேரம் கூசச்செய்தது பின்பு அவர்கள் எழுந்து பார்த்த [illegible]

[illegible] ந்தை, வெடியரசன் நாட [illegible] ம் வையா பாடல் முதலா னவற்றை நோக்குமிடத்து நயினையம்பதி யாத்திரை ஸ்தலமாகவும் சிறந்ததுறை முகமாகவும் விளங்கியுள் ளது என்பது அறியக்கிடக் கின்றது. நாகம் பூஷித்த படியால் நாகபூஷணி 'நாகேஸ்வரி' 'நாகம்மாள்' என்றும் நாகர் என்ற நாக பரம்பரையினர் முற்காலம் வாழ்ந்தபடியாலும் நாகதம் பிரான், தமது இடப்பாக த்தே அம்பாளை வைத்து வீற்றிருப்பதாலும் நாக நயினாதீவு என்றும் பெயர் பெறுவதாக சரித்திரங்கள் செப்புகின்றன.

[illegible] இன்றும் பிரத்தி[illegible]சமாக காட்சி அளிப்பதுஇம்மூர்த்தி என்றும், இது சர்ப்பவழி பாட்டுகாலம் 14 ஆயிரம் ஆண்டுகளுக்கு குற் பட்டதென்றும், சர்ப்பவழிபாட்டில்[illegible] பற் றுடையமக்கள் பிற்காலத் தில் நாகபூஷணியை அரு கிலே சிறப்பாக பிரதிஷ்டை செய்திருக்கிருர்கள் என்றும் சொன்னுர்

மூலஸ்தான மூர்த்தியின் அமைப்மை பார்த்தால், பல்லாயிரம் ஆண்டுகட்கு முந்தியதென்றும் இதைப் பார்க்கும்போது விக்கிரகத் துக்குப்பின் உள்ள நாகம் சீறுவதைப்போல் பயங்கர மாகக் காட்சிஅளிக்கிறது என்றும் உற்சவ விக்கிரகம் சுமார் 500 வருடகாலத் திற்கு முந்தியதாகத் தெரிவ தாகவும் இத்தகைய பிர காசமுடைய விக்கிரகத்தை தாம் எங்கும் பார்த்ததில்லை என்றும் ஸ்ரீ செல்லக்கண்ணு ஸ்தபதியார் கூறினுர்.

### "திருத்தேர்"

அம்பாள் ஆலயத்தில் பக் தர்களது பெருமுயற்சியால் சிறந்ததேர் அமைக்கப்பட் டுள்ளது. யாவரும் அறிந்த தொன்ருகும். இத்திருப் பணியை இனிது நிறைவேற் றிய பெருமை திருவாளர் கள் எம் ஸ்ரீகாந்தா, செ சிவஞானம், ஆ கந்தையா, அமரர் வே சுந்தரம்பிள்ளை வே செல்வநாயகம். கா ஆறுமுகம் ஆகியோரையும் இனிது சமைத்த நாகர் கோயில் திரு எஸ் குமார சுவாமி ஸ்தாபதியார் கோஷ் டியினரையுமே சாரும் பக் தர்கள் பல வகையாலும் உதவி புரிந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது இலங் கையிலே இத்துணைச் சிறப்பு வாய்ந்த தேர் இதுவரை அமைக்கப்படவில்லை என்று தான் கூறவேண்டும்

இந்தத்தேரில் அழகுநிறை சிற்பங்களைப்பார்க்க வந்த தாக அவுஸ்திரேலிய மர வேலை நிபுணர் திரு கெப்ட குறிப்பிட்டுள்ளார். இத் தேரோடு விநாயகப்பெரு மானுக்கும் ஆலய பரிபா லன சபையினரும் பொது மக்களும் கூடி அழகிய சித் திரதேர் ஒன்று செய்துஅண் மையில்தான் வெள்ளோட் டம்நடந்தது. இதையடுத்து சுப்பிரமணியப் பெருமானுக் கும் ஒருசிறந்ததேர் செய்ய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அம்பாளது இவ்வருட கொடியேற்றம் 5-6-70ல் தேர்த்திருவிழா 18-6-70ல் தீர்த்ததிருவிழா 19-6-70ல் தெற்போற்சவம் 20-6-70 லும் சிறப்பாக நடைபெற வுள்ளது. இம்முறை வழமை

இன்று

# அன்பின் அரசர் அவனியை அன்பு செய்த நன்னுள்

மனுக்குலத்தின்மீது கொண்டமட்டற்ற அன்பி னுல் தேவன் மனிதகோலம் பூண்டு மாடுறையும் தொழு வத்தில் பிறந்து அட்ட தரித்திரத்தை ஏற்றுமனுக் குலத்தைமீட்டு ரட்சித்தார் இறுதிவரை மனுக்குலத்தை நேசித்தார். அதற்காகத் தம்மிடமுள்ள கடைசித்துளி ரத்தமும் சிந்தினுர். அவர் சிலுவையில் தொங்கிய போது அவர் உயிர்பிரிந்து விட்டதா என்பதை அறிய போர்ச்சேவகன் ஒருவன் ஈட்டியினுல் அவர் விலாவில் குத்தினுன். உடனே விலாவி னின்றும் இரத்தமும் தண் ணீரும் புறப்பட்டது. ஏக காயமாக்கப்பட்ட சரீரத்தி லிருந்து இரத்தம் முழுவதும் சொரிந்துவிட்டது. இப் போது இறுதியாக இருந்த இரத்தமும் சிந்தப்பட்டது. இந்த நேரத்திலும் தமது அ[illegible] மிகுதியைக் காண் பி[illegible] விலாவில் இருந்து சி[illegible]ந்தம்குத்தியவனின் குரு[illegible]ன ஒரு கண்ணில் பட்டு அவன் குணமானுன். அன்பின் ஆழத்தைத்தான் அளவிடமுடியுமோ?

1675-ம் ஆண்டு யேசுஅர்ச் மார்கரீத் மரியம்காளுக்குத் தமது திரு இருதயத்தைக் காண்பித்து "இதோ மனி தரை அளவுகடந்த விதமாய் நேசிக்கும் இருதயம் இதற்கு ஆறுதல் தரும்படி ஒருவ ரைத்தேடினேன் ஒருவரும் கிடைக்கவில்லை" என்று முறையிட்டார்.

இதயம் அன்பின் இருப் பிடம் அன்பிலானை இதய மற்றவன் என அழைக்கின் ரேம்.

மனித அன்பு மனித இதய மாக ரூபிகரிக்கப்படுவது போல் கிறிஸ்துவின் இரட் சணிய அன்பும் யேசுவின் இதயமாக உருப்பெற்றது. இதன் அடிப்படையில் தோன்றியதுதான் திருஇரு தயப் பக்தி முயற்சி. யேசு வின் சிலுவையே இத்தெய் வீக அன்பைப் பறைசாற் றும் சக்தி நிறை கருவியா கும்.

அதன்பின் அடித்தளம்இத யம். இதயத்தில் உதய மான அன்புதான் வெளிக கிரிகைகளினுல் வெளிப்படு கிறது. கட்டியணைககிறது, கன்னத்தில் முத்தமளிக கிறது ஆனந்தககண்ணீர் சொரிகிறது. ஆனுல் யேசு வின் அன்போ இவற்றிலிரு ந்து முற்றிலும் மாறுபட் டது, அன்பினுல் தனது இரத்தம் முழுவதையும் சிந்தி தமது திருச்சரீரத்தை யும் திருஇரத்தத்தையும் விசுவாசிகளின் ஆன்மஉண வாக அளித்திருககிருர் அவர். அவர்களை முடிவு பரியந்தம் சிநேகித்தார், "ஒருவரை ஒருவர் அன்பு செய்தாலல்லோ என் சீடர் களாயிருப்பீர்கள்"

(அரு. 13,1)

இதய அன்பரான யேசு எம்மில்லங்களில் ஆட்சி செய்ய வழிசெய்ய வேண் டும். குடும்பங்களை இருதய அரசருககு ஒப்புககொடுத்து அவரின் அன்புப்பபாதையில் நாம் செல்லவேண்டும் அப் போதுதான் அன்பும் சமா தானமும் குடும்பங்களில் நிலவும். யேசுவின் அன்பை நாம் பெறமுடியும். பிறருக் கும் அதைக கொடுகக முடி யும்

—இ. பேர்னுட்

கோட்டை, வியாழன்

கடந்த செவ்வாய்க் கிழமையன்று பிரதமர் திரு மதி பண்டாரநாயக்காவை அவரது இல்லத்தில் கத்தோ லிக்க தலைமைப்பீடம் சந்தி த்து அவருக்கு அவரது வெற்றி குறித்து வாழ்த்தை யும் மரியாதையையும் தெரி வித்துள்ளது.

காசி மேற்றிராணியார் அன்டனி டீ சேரம், கொழு ம்பு அதிமேற்றிராணியார் தோமஸ் கர்த்தினுச் திருகோணமலை உதவி மேற்றிராணியார் தியோ குப்பிள்ளை கர்தினுலின் காரியதரிசி பிதாகிளின்டன் ஆனந்தப்பா சிலாபத்தைச் சேர்ந்த மேற்றிராணியார் மார்க்குப் பெர்னுன்டோ கோ அட்ஜுட்டர் ஆகி யோர் பிரதமர் சிறிமா வைச் சந்தித்துத் தமது மரியாதையைத் தெரிவித் துள்ளார்கள்.

[illegible] நடை பெற்ற போட்டியில் உரு குவே 2-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இங்கிலாந்துக்கும் - ருமே னியாவுக்குமிடையில் நடை பெற்ற கடும் போட்டியில் இங்கிலாந்து 1-0 கோலால் வெற்றி பெற்றது.

பேருவுக்கும் - பல்கேரியா வுக்கும் இடையில் நடை பெற்ற போட்டியில் பேரு 3-2 கோல்களால் வெற்றி பெற்றது

— —

அமெரிக்க

### சமாதானப்படை பற்றி பரிசீலனை

கோட்டை, வியா

கலாச்சார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகா இலங் கையிலுள்ள அமெரிக்க சமா தானப் படையினரது எதிர் காலம் குறித்துத்தான் பரிசீ லனை செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வித்தியாசாலையை மகாவித் தியாலயமாகத் தரம் உயர் த்தநடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தீர்மான மும்நிறைவேறப் ட்பட்டது.

— —

### மாணவா கோரிக்கை

கோட்டை, வியா.

கல்வியமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் முக மத்தை பல்கலைக் கழகங்க ளில் 'போல்றூம் நடனம், துயில்உரி நடனம்' போன்ற மேலைநாட்டு நடனங்கள் நடைபெற அனுமதிக்கக் கூடாதென அவரைச் சந் தித்த கொழும்புப் பல்கலைக் கழக மாணவர்களில் சிலர் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் மேலும் பல்கலைக் கழக நிர்வாகிகளில் சிலரை யும் நீக்குமாறும் கேட்டுள் ளார்கள்.

# "அரசியல் குரோதங்களை மறந்து மீண்டும் ஒன்றுபட்டுவாழுங்கள்"

## காலி மேயரின் வேண்டுகோள்

காலி. வியாழன்

"தேர்தல் முடிந்துவிட்ட தால் கட்சிப்பாகுபாட்டினுல் பிரிந்து நின்றவர்கள் அரசி யல் குரோதங்களை மறந்து மீண்டும் ஒற்றுமைப்பட்டு சிறு, சிறு மனக்கசப்புகளை மறந்து செயலாற்றி இப் பகுதியில் அமைதியையும் சமாதானத்தையும் மீண்டும் நிலை நாட்ட முன் வரும்படி கேட்டுக் கொள்கிறேன்".

காலிமேயரும் சுதந்திர கட்சி காலிகிளை தலைவரு மான, திரு. டபிள்யூ. ரி. விஜயகுலசூரியா, மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோ ளில் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்

தென்பகுதி தலைநகர தலைமை பற்றி காலிமாநகர சபை எல்லைக்குட்பட்ட வரியிறுப் பாளர்களுக்கு அவர் விடுத்துள்ள வேண்டு கோளில் மேலும் கூறப்பட் டிருப்பதாவது:- தேர்தல் நடந்து முடிந்த பின்னர், சில இடங்களில் சிறு, சிறு வன்செயல்கள் ஏற்பட்டுள் ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது. காலி நகரத்தில் ஏற் பட்ட தாக்குதல் சம்பவங் களினுல் உடமைகளுக்கு சேதமேற்பட்டுள்ள தாகவும் சிலர் காயமடைந்திருப்ப தாகவும். அறிக்கைகள் கிடைத்துள்ளது. வெவ்வேறு இனத்தவர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள வன்முறை சம்பவங்களினுல் ஒரு பயங் கர நிலைமை உருவாக்க கூடிய நிலை ஏற்பட்டுள்ள தாகவும் அறிக்கைகிடைத் துள்ளது.

கடந்த தேர்தலில் எப்பக் கத்தை ஆதரித்தவர்களாக இருந்தாலும் சரி இந் நகரத் தில் வாழும் சகல மக்களுக் கும் நான் இந்த வேண்டு கோளை விடுக்கிறேன் மிகவும் நட்புறவோடும் அந்நியோன்யமாகவும் அன்பாகவும் ஒருவருக் கொருவர் ஒத்தாசையாக வும் கடந்த காலத்தில் வாழ்ந்து வந்த சகல இன மக்கள் மத்தியிலும் மீண்டும் நல்லெண்ணமும் சமான மும் ஏற்பட கடந்த தேர்த லில் எப்பகுதியை ஆதரித் தவர்களாகவிடுந்தாலும் சரி இந்த நல்முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் போராட்டம் முடிந்துவிட்டதால், அவ ற்றை எல்லாம் மறந்து நாம் ஒன்றுபட்டு, இப்பகுதியில் மீண்டும் அமைதியும், சமா தானமும் நிலவபாடுபட வேண்டும்.

காலி நகர பகுதி சுதந்திர கட்சித்தலைவர் என்ற முறை யிலும், தேர்தலில் போட்டி இட்ட அபேட்சகர்களில் ஒருவர் என்ற முறையிலும், எமது கட்சி ஆதரவாளர் களையும் மற்றக்கட்சி ஆதர வாளர்களையும், எந்தவித மான வன்செயல்களிலும் ஈடுபடாமலிருக்கும்படிகேட் டுக்கொள்கிறேன். நல் லெண்ணத்தையும், சமாதா னத்தையும் ஏற்படுத்தும் படி பிரதமர் விடுத்தவேண்டு கோளுக்கு செவிசாய்க்கும் படி சகலரையும் கேட்டுக் கொள்கிறேன் நாங்கள் பெற்றவெற்றியை. எதிரி யைப் பழிவாங்காத முறை யில் கொண்டாடவேண்டும் எந்தவகையான கலவரச் சம்பவங்களும், மக்கள்எதிர் ப்புக்கு எதிரான நடவடிக் கையாக கருதஇடமுண்டு ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசாங்கத்தின் நற்பெய ரைப் பாதுகாக்க வேண்டி யது நமதுகடமையாகும் புதிய அரசாங்கத்தின் முயற் சிகளுக்கு, எங்கள் எல்லா ரினதும் நன்மையைகருதி, ஒத்துழைப்பு வழங்கவேண் டும்

நாட்டின் எப்பகுதியிலா வது எந்த விதமான வன் செயல்களையும் செய்யாமல், புதிய அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண் டும்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியில் 63-ம் இலக்க அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org